# க.பொ.த. (சா.தர)ப் பரீட்சை - 2012

## மதிப்பீட்டு அறிக்கை

# 60 - வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும்

Curriculum
Assessment
&
Evaluation
Teaching
Learning
N E T S

ஆய்வு அபிவிருத்திக் கிளை,
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

# க.பொ.த. (சா.தர)ப் பரீட்சை - 2012
# மதிப்பீட்டு அறிக்கை

## 60 - வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும்

Curriculum
Assessment & Evaluation
Teaching
Learning
N E T S


ஆய்வு அபிவிருத்திக் கிளை
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

**முழுப்பதிப்புரிமையுடையது.**

**வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும்**

மதிப்பீட்டு அறிக்கை - க.பொ.த. (சா.தர)ப் பரீட்சை - 2012

**நிதி அனுசரணை**

எதிர்கால அறிவை மையமாகக் கொண்டு பாடசாலை
கல்விமுறைமையை மாற்றியமைக்கும் செயற்றிட்டம்
(TSEP - WB)

# அறிமுகம்

இலங்கையின் பொதுப் பரீட்சைகளில் க.பொ.த (சா.தர)ப் பரீட்சைக்கே அதிகளவான பரீட்சார்த்திகள் தோற்றுகின்றனர். தேசிய மட்டத்தில் நடாத்தப்படும் இப்பரீட்சையின் பெறுபேற்றின் அடிப்படையில் வழங்கப்படும் சான்றிதழானது உயர் கல்விக்குத் தகுதியானவர்களைத் தெரிவுசெய்வதற்கு மட்டுமன்றி நடுத்தரமட்ட வேலைவாய்ப்புக்களைப் பெறுவதற்கும் தேசிய மற்றும் சர்வதேச ரீதியான பல்கலைக்கழகங்களில் சில பாட நெறிகளுக்கான அடிப்படைத் தகைமையாகவும் கொள்ளப்படுகின்றது. இப்பரீட்சையின் நம்பகம், தகுதி, தரம் ஆகியனவே இதற்குக் காரணமாக அமைகின்றது.

இப்பரீட்சையில் உயர் அடைவைப் பெறுவதற்கு மாணவரும் அவர்களது அடைவை உறுதிப்படுத்துவதற்கு ஆசிரியர்களும் பெற்றோர்களும் அயராது உழைக்கின்றனர். இவர்களது எதிர்பார்ப்புக்களை அடைவதற்கு உதவும் முகமாகவே இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இந்த மதிப்பீட்டு அறிக்கையைத் தயாரித்துள்ளது. இந்த மதிப்பீட்டு அறிக்கையில் அடங்கியுள்ள தகவல்கள் பரீட்சார்த்திகள், ஆசிரியர்கள், அதிபர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், பாடத்துக்குப் பொறுப்பான கல்விப் பணிப்பாளர்கள், பெற்றோர்கள் மற்றும் கல்விசார்ந்த ஆராய்ச்சிகளில் ஈடுபடுவோர் ஆகியோருக்கு பயனுடையதாக அமையும். எனவே, இந்த அறிக்கையை அனேகமானோரின் பயன்பாட்டுக்கு ஏற்ற வகையில் நூலகத்தில் பேணுவது சிறந்ததாகும்.

இந்த மதிப்பீட்டு அறிக்கை மூன்று பகுதிகளைக் கொண்டதாகும். பாடக்குறிக்கோள்கள், பாட அடைவு தொடர்பான எண்ணளவிலான தகவல்கள் இந்தப் பாட வினாப்பத்திரத்தின் அடிப்படையில் பரீட்சார்த்திகளின் அடைவு ஆகியன ஒவ்வொரு வினாவுக்குமென தனித்தனியே பகுதி 1 இல் உள்ளடக்கப்பட்டுள்ளது. மதிப்பீடு மற்றும் ஆராய்ச்சித் துறைகளில் பயன்படுத்தப்பட்டுவரும் மரபுரீதியான சோதனைக் கோட்பாடு (Classical testing theory) மற்றும் உருப்படித் துலங்கல் கோட்பாடு (Item response theory) ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு பரீட்சைத் திணைக்களத்தின் ஆய்வு அபிவிருத்திக் கிளையினால் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளமையால் இதில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்கள் உச்ச நம்பகத்தன்மை, தகுதி ஆகியவற்றைக் கொண்டதாகும்.

வரலாறு பாடத்தின் I,II ஆகிய வினாப்பத்திரங்களில் எதிர்பார்க்கப்பட்ட விடைகள், புள்ளி வழங்கும் திட்டம், விடையளிக்கப்பட்ட விதம் தொடர்பான அவதானிப்புக்கள், முடிவுகள் மற்றும் பின்னூட்டலுக்கான ஆலோசனைகள் ஆகியன இந்த அறிக்கையின் பகுதி II இல் உள்ளடக்கப்பட்டுள்ளது.

வினாப்பத்திரத்தின் ஒவ்வொரு வினாவுக்கும் விடையளிக்கும்போது பரீட்சார்த்திகளினால் கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள், கற்றல் - கற்பித்தல் செயன்முறை தொடர்பான கருத்துக்கள், ஆலோசனைகள் ஆகியன இந்த அறிக்கையின் பகுதி III இல் உள்ளடக்கப்பட்டுள்ளன. பல்வேறு தேர்ச்சி, தேர்ச்சி மட்டங்களை அண்மிக்கத் தக்க வகையில் கற்றல் - கற்பித்தல் செயன்முறையை நடைமுறைப்படுத்தும் விதம் பற்றிய வழிகாட்டல் இதன்மூலம் கிடைக்கப்பெறுமென நினைக்கின்றேன்.

இந்த அறிக்கையின் தரத்தை மேம்படுத்தத்தக்க உங்களது ஆலோசனைகள், கருத்துக்கள் ஆகியவற்றை எமக்குத் தெரிவிக்குமாறு வேண்டுகிறோம். இந்த அறிக்கையைத் தயாரிக்க அர்ப்பணிப்புடன் பணியாற்றிய கட்டுப்பாட்டுப் பரீட்சகர்கள் மற்றும் வளவாளர்களாகப் பங்கேற்றவர்களுக்கும் தகவல்களை வழங்கிய பிரதம/ மேலதிக, பிரதம/ உதவிப் பரீட்சகர்களுக்கும் இலங்கைப் பரீட்சைத் திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் பணிக்குழுவினர் ஆகியோருக்கும் எனது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டபிள்யு. எம். என். ஜே. புஷ்பகுமார
பரீட்சை ஆணையாளர் நாயகம்

2013 நவம்பர் 11

ஆய்வு அபிவிருத்திக் கிளை
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
பெலவத்தை,
பத்தரமுல்ல.

| | | |
|---|---|---|
| வழிகாட்டல் | - | டபிள்யு. எம். என். ஜே. புஷ்பகுமார<br>பரீட்சை ஆணையாளர் நாயகம் |
| ஒழுங்கமைப்பும் நெறிப்படுத்தலும் | - | கயாத்திரி அபேகுணசேகர<br>பரீட்சை ஆணையாளர்<br>(ஆய்வு அபிவிருத்திக் கிளை) |
| இணைப்பும் தொகுப்பும் | - | டபிள்யூ.ஏ.எஸ் பெரேரா<br>உதவிப் பரீட்சை ஆணையாளர் |
| ஆக்கக் குழு | - | பீ.ஏ. நிலூகா சுரஞ்சி அநுராதா<br>சிரேட்ட விரிவுரையாளர்<br>நிதித்துறை, முகாமைத்துவ வணிகத்துறை<br>ஸ்ரீ ஜெயவர்தன பல்கலைக்கழகம்<br>நுகேகொட |
| | - | எம்.ஏ.ஐ.பி. பெரேரா<br>சிரேட்ட விரிவுரையாளர்<br>தேசிய கல்வி நிறுவகம்<br>மகரகம |
| | - | ஆர்.பி.டீ.ஜீ. ராஜபக்ஷ<br>இலங்கை ஆசிரியர் சேவை<br>மே/ஜ/ ஹென்ரி ஓல்கட் வித்தியாலயம்<br>கொலன்னாவ |
| | - | பி.ஏ. ஆனந்த<br>இலங்கை ஆசிரியர் சேவை<br>மே/ஹோ/ சிரி பராக்கிரம மகா வித்தியாலயம்<br>ஹோமகம |
| மொழி பெயர்ப்பு | - | சி. எல். எம். நவாஸ்<br>ஆசிரிய ஆலோசகர் (வணிகம்)<br>இப்பாகமுவ கல்வி வலயம் |
| கணினிப் பக்க வடிவமைப்பு | - | பொ. அற்புதரூபன்<br>முகாமைத்துவ உதவியாளர்<br><br>செல்வி எஸ். றஹீனா ஹாஷிம்<br>கணினி தரவுப் பதிவாளர் |

# உள்ளடக்கம்

பக்க எண்

## பகுதி I

1. **பாடக் குறிக்கோள்களும் பாட அடைவும் தொடர்பான தகவல்கள்**

1.1 **பாடக் குறிக்கோள்கள்** 1

1.2 **பாட அடைவு தொடர்பான புள்ளிவிபரத் தகவல்கள்**

1.2.1 பாடத்துக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை 2

1.2.2 பரீட்சார்த்திகள் தரங்கள் பெற்ற விதம் 2

1.2.3 மாவட்டங்களின் அடிப்படையில் முதன் முறையாகத் தோற்றிய பாடசாலைப் பரீட்சார்த்திகள் தரங்கள் பெற்ற விதம் 3

1.2.4 கல்வி வலயங்களின் அடிப்படையில் முதல் முறையாகத் தோற்றிய பாடசாலைப் பரீட்சார்த்திகள் தரங்கள் பெற்ற விதம் 4

1.2.5 வகுப்பாயிடை அடிப்படையில் புள்ளிகள் பெற்ற விதம் 7

1.3 **பாட அடைவு பற்றிய பகுப்பாய்வு**

1.3.1 வினாப்பத்திரம் I இல் பெறப்பட்டுள்ள அடைவு 8

1.3.2 வினாப்பத்திரம் II இல் வினாக்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள விதம் 9

1.3.3 வினாப்பத்திரம் II இல் வினாக்களுக்குப் புள்ளிகள் பெறப்பட்டுள்ள விதம் 9

1.3.4 வினாப்பத்திரம் II இல் பெறப்பட்ட அடைவு 10

## பகுதி II

2. **வினாக்களும் அவற்றிற்கு விடையளித்தமை தொடர்பான தகவல்களும்**

2.1 **வினாப்பத்திரம் I உம் அதற்கு விடையளிக்கப்பட்டமை தொடர்பான தகவல்களும்**

2.1.1 வினாப்பத்திரம் I - கட்டமைப்பு 11

2.1.2 வினாப்பத்திரம் I 12

2.1.3 வினாப்பத்திரம் I - எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும் 17

2.1.4 வினாப்பத்திரம் I இற்கு விடையளிக்கப்பட்டுள்ள விதம் பற்றிய அவதானிப்புகளும் முடிவுகளும் (பாடப்பரப்புக்கள் ரீதியான) 18

2.1.5 வினாப்பத்திரம் I இல் ஒவ்வொரு வினாவுக்கும் மாணவர்கள் உரிய விடைத் தெரிவை மேற்கொண்ட விதம் (சதவீதத்தில்) 19

2.1.6 வினாப்பத்திரம் I இற்கு விடையளித்தல் தொடர்பான முழுமையான அவதானிப்புக்களும், முடிவுகளும், ஆலோசனைகளும் 20

2.2 **வினாப்பத்திரம் II உம் அதற்கு விடையளிக்கப்பட்டமை தொடர்பான தகவல்களும்**

2.2.1 வினாப்பத்திரம் II - கட்டமைப்பு 21

2.2.2 வினாப்பத்திரம் II - எதிர்பார்க்கப்பட்ட விடைகள், புள்ளி வழங்கும் திட்டம், விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் 22

2.2.3 வினாப்பத்திரம் II இற்கு விடையளித்தல் தொடர்பான முழுமையான அவதானிப்புக்களும், தீர்மானங்களும், முன்மொழிவுகளும் 43

## பகுதி III

3. **விடையளிக்கும்போது அவதானிக்கப்பட வேண்டிய விடயங்களும் ஆலோசனைகளும்**

3.1 **விடையளிக்கும்போது அவதானிக்கப்பட வேண்டிய விடயங்கள்** 44

3.2 **கற்றல் கற்பித்தல் தொடர்பான கருத்துக்களும் ஆலோசனைகளும்** 46

# பகுதி I

## 1 பாடக் குறிக்கோள்களும் பாட அடைவும் தொடர்பான தகவல்கள்

### 1.1 பாடக் குறிக்கோள்கள்

- ✶ வணிகச் சூழலில் காணப்படும் சந்தர்ப்பங்கள், சவால்கள் தொடர்பிலான அறிவுடன் வணிகச் சந்தர்ப்பங்களைத் தெரிவு செய்தல்.
- ✶ சிறந்த வணிக முகாமைத்துவத்திற்கான திறனைப் பெற்றுக்கொள்ளல்.
- ✶ வணிக நிறுவனமொன்றின் கொடுக்கல் வாங்கல்களைச் சரியாகப் பதிவு செய்தல், பகுப்பாய்வு செய்தல் என்பவற்றில் ஈடுபடுவதினூடாக வணிகத்தின் நிலைமை தொடர்பான விளக்கமொன்றுடன் செயற்படல்.
- ✶ வணிகத்துடன் இணைந்த தொழிலொன்றில் ஈடுபடத் தூண்டப்படல் அல்லது தனக்கே உரிய முயற்சியாண்மையினை ஆரம்பிக்கும் திறனை உருவாக்கல்.
- ✶ இலங்கையில் பொருளாதார, சமூக அபிவிருத்திக்குத் தேவையான மனித வளங்களை விருத்தி செய்தல்.

## 1.2 பாட அடைவு தொடர்பான புள்ளிவிபரத் தகவல்கள்

### 1.2.1 பாடத்துக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை

| மொழி | பாடசாலை | தனிப்பட்ட | மொத்தம் |
|---|---|---|---|
| சிங்களம் | 71,964 | 1,564 | 73,528 |
| தமிழ் | 19,305 | 2,354 | 21,659 |
| ஆங்கிலம் | 1,977 | 2,389 | 4,366 |
| **மொத்தம்** | **93,246** | **6,307** | **99,553** |

**அட்டவணை 1**

### 1.2.2 பரீட்சார்த்திகள் தரங்கள் பெற்ற விதம்

| தரம் | பாடசாலைப் பரீட்சார்த்திகள் | | தனிப்பட்ட பரீட்சார்த்திகள் | | மொத்தம் | சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | சதவீதம் | எண்ணிக்கை | சதவீதம் | | |
| A | 22,295 | 23.91 | 1,300 | 20.61 | 23,595 | 23.70 |
| B | 14,448 | 15.49 | 815 | 12.92 | 15,263 | 15.33 |
| C | 22,136 | 23.74 | 1,281 | 20.31 | 23,417 | 23.52 |
| S | 21,331 | 22.88 | 1,531 | 24.27 | 22,862 | 22.96 |
| W | 13,036 | 13.98 | 1,380 | 21.89 | 14,416 | 14.49 |
| **மொத்தம்** | **93,246** | **100.00** | **6,307** | **100.00** | **99,553** | **100.00** |

**அட்டவணை 2**

### 1.2.3 மாவட்டங்கள் அடிப்படையில் முதன் முறையாகத் தோற்றிய பாடசாலைப் பரீட்சார்த்திகள் தரங்கள் பெற்றுள்ள முறை:

| மாவட்டம் | தோற்றியோர் எண்ணிக்கை | மிகச் சிறந்த சித்தி (A) பெற்றவர் | | விசேட திறமைச் சித்தி (B) பெற்றவர் | | திறமைச் சித்தி (C) பெற்றவர் | | சாதாரண சித்தி (S) பெற்றவர் | | சித்தி (A+B+C+S) பெற்றவர் | | சித்தி யடையாதவர் (W) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| 1. கொழும்பு | 20337 | 6631 | 32.61 | 3347 | 16.46 | 4469 | 21.97 | 3614 | 17.77 | 18061 | 88.81 | 2276 | 11.19 |
| 2. கம்பஹா | 12719 | 3136 | 24.66 | 2047 | 16.09 | 3025 | 23.78 | 2713 | 21.33 | 10921 | 85.86 | 1798 | 14.14 |
| 3. களுத்துறை | 5831 | 1446 | 24.80 | 925 | 15.86 | 1395 | 23.92 | 1258 | 21.57 | 5024 | 86.16 | 807 | 13.84 |
| 4. கண்டி | 5167 | 1097 | 21.23 | 818 | 15.83 | 1269 | 24.56 | 1221 | 23.63 | 4405 | 85.25 | 762 | 14.75 |
| 5. மாத்தளை | 902 | 98 | 10.86 | 136 | 15.08 | 236 | 26.16 | 306 | 33.92 | 776 | 86.03 | 126 | 13.97 |
| 6. நுவரெலியா | 1977 | 219 | 11.08 | 215 | 10.88 | 467 | 23.62 | 669 | 33.84 | 1570 | 79.41 | 407 | 20.59 |
| 7. காலி | 5950 | 1622 | 27.26 | 1036 | 17.41 | 1489 | 25.03 | 1151 | 19.34 | 5298 | 89.04 | 652 | 10.96 |
| 8. மாத்தறை | 3253 | 1102 | 33.88 | 531 | 16.32 | 754 | 23.18 | 608 | 18.69 | 2995 | 92.07 | 258 | 7.93 |
| 9. அம்பாந்தோட்டை | 1681 | 413 | 24.57 | 295 | 17.55 | 451 | 26.83 | 389 | 23.14 | 1548 | 92.09 | 133 | 7.91 |
| 10. யாழ்ப்பாணம் | 2909 | 720 | 24.75 | 498 | 17.12 | 741 | 25.47 | 634 | 21.79 | 2593 | 89.14 | 316 | 10.86 |
| 11. கிளிநொச்சி | 357 | 38 | 10.64 | 50 | 14.01 | 80 | 22.41 | 112 | 31.37 | 280 | 78.43 | 77 | 21.57 |
| 12. மன்னார் | 311 | 50 | 16.08 | 34 | 10.93 | 73 | 23.47 | 95 | 30.55 | 252 | 81.03 | 59 | 18.97 |
| 13. வவுனியா | 703 | 159 | 22.62 | 123 | 17.50 | 175 | 24.89 | 169 | 24.04 | 626 | 89.05 | 77 | 10.95 |
| 14. முல்லைத்தீவு | 220 | 22 | 10.00 | 31 | 14.09 | 68 | 30.91 | 60 | 27.27 | 181 | 82.27 | 39 | 17.73 |
| 15. மட்டக்களப்பு | 1426 | 366 | 25.67 | 246 | 17.25 | 387 | 27.14 | 331 | 23.21 | 1330 | 93.27 | 96 | 6.73 |
| 16. அம்பாறை | 1575 | 276 | 17.52 | 247 | 15.68 | 385 | 24.44 | 455 | 28.89 | 1363 | 86.54 | 212 | 13.46 |
| 17. திருகோணமலை | 1168 | 223 | 19.09 | 187 | 16.01 | 341 | 29.20 | 251 | 21.49 | 1002 | 85.79 | 166 | 14.21 |
| 18. குருநாகல் | 2566 | 529 | 20.62 | 469 | 18.28 | 693 | 27.01 | 619 | 24.12 | 2310 | 90.02 | 256 | 9.98 |
| 19. புத்தளம் | 3071 | 664 | 21.62 | 498 | 16.22 | 739 | 24.06 | 794 | 25.85 | 2695 | 87.76 | 376 | 12.24 |
| 20. அனுராதபுரம் | 2376 | 480 | 20.20 | 357 | 15.03 | 629 | 26.47 | 597 | 25.13 | 2063 | 86.83 | 313 | 13.17 |
| 21. பொலன்னறுவை | 1158 | 202 | 17.44 | 186 | 16.06 | 335 | 28.93 | 287 | 24.78 | 1010 | 87.22 | 148 | 12.78 |
| 22. பதுளை | 2538 | 367 | 14.46 | 305 | 12.02 | 592 | 23.33 | 767 | 30.22 | 2031 | 80.02 | 507 | 19.98 |
| 23. மொனராகலை | 633 | 94 | 14.85 | 93 | 14.69 | 167 | 26.38 | 171 | 27.01 | 525 | 82.94 | 108 | 17.06 |
| 24. இரத்தினபுரி | 3397 | 874 | 25.73 | 530 | 15.60 | 839 | 24.70 | 742 | 21.84 | 2985 | 87.87 | 412 | 12.13 |
| 25. கேகாலை | 2432 | 480 | 19.74 | 367 | 15.09 | 670 | 27.55 | 630 | 25.90 | 2147 | 88.28 | 285 | 11.72 |
| **நாடு முழுவதிலும்** | **85946** | **21693** | **25.24** | **13830** | **16.09** | **20800** | **24.20** | **18887** | **21.98** | **75210** | **87.50** | **10736** | **12.49** |

**அட்டவணை 3**

## 1.2.4 கல்வி வலயங்கள் அடிப்படையில் முதன் முறையாகத் தோற்றிய பாடசாலைப் பரீட்சார்த்திகள் தரங்கள் பெற்றுள்ள முறை :

| கல்வி வலயம் | தோற்றியோர் எண்ணிக்கை | மிகச் சிறந்த சித்தி (A) பெற்றவர் | | விசேட திறமைச் சித்தி (B) பெற்றவர் | | திறமைச் சித்தி (C) பெற்றவர் | | சாதாரண சித்தி (S) பெற்றவர் | | சித்தி (A+B+C+S) பெற்றவர் | | சித்தி யடையாதவர் (W) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| 1. கொழும்பு | 11216 | 4053 | 36.14 | 1780 | 15.87 | 2294 | 20.45 | 1783 | 15.90 | 9910 | 88.36 | 1306 | 11.64 |
| 2. ஹோமாகம | 1502 | 272 | 18.11 | 200 | 13.32 | 377 | 25.10 | 389 | 25.90 | 1238 | 82.42 | 264 | 17.58 |
| 3. ஸ்ரீ ஜயவர்த்தனபுர | 3939 | 1292 | 32.80 | 722 | 18.33 | 912 | 23.15 | 712 | 18.08 | 3638 | 92.36 | 301 | 7.64 |
| 4. பிலியந்தல | 3680 | 1014 | 27.55 | 645 | 17.53 | 886 | 24.08 | 730 | 19.84 | 3275 | 88.99 | 405 | 11.01 |
| 5. கம்பஹா | 3726 | 1214 | 32.58 | 631 | 16.94 | 799 | 21.44 | 676 | 18.14 | 3320 | 89.10 | 406 | 10.90 |
| 6 மினுவாங்கொட | 1647 | 321 | 19.49 | 290 | 17.61 | 444 | 26.96 | 368 | 22.34 | 1423 | 86.40 | 224 | 13.60 |
| 7. நீர்கொழும்பு | 3794 | 845 | 22.27 | 575 | 15.16 | 927 | 24.43 | 834 | 21.98 | 3181 | 83.84 | 613 | 16.16 |
| 8. களனி | 3552 | 756 | 21.28 | 551 | 15.51 | 855 | 24.07 | 835 | 23.51 | 2997 | 84.38 | 555 | 15.63 |
| 9. களுத்துறை | 3868 | 994 | 25.70 | 607 | 15.69 | 903 | 23.35 | 842 | 21.77 | 3346 | 86.50 | 522 | 13.50 |
| 10. மத்துகம | 674 | 164 | 24.33 | 112 | 16.62 | 174 | 25.82 | 140 | 20.77 | 590 | 87.54 | 84 | 12.46 |
| 11. ஹொரணை | 1289 | 288 | 22.34 | 206 | 15.98 | 318 | 24.67 | 276 | 21.41 | 1088 | 84.41 | 201 | 15.59 |
| 12. கண்டி | 2362 | 739 | 31.29 | 470 | 19.90 | 597 | 25.28 | 407 | 17.23 | 2213 | 93.69 | 149 | 6.31 |
| 13. தெனுவர | 489 | 60 | 12.27 | 71 | 14.52 | 105 | 21.47 | 171 | 34.97 | 407 | 83.23 | 82 | 16.77 |
| 14. கம்பளை | 981 | 128 | 13.05 | 117 | 11.93 | 238 | 24.26 | 265 | 27.01 | 748 | 76.25 | 233 | 23.75 |
| 15. தெல்தெனியா | 156 | 13 | 8.33 | 19 | 12.18 | 33 | 21.15 | 48 | 30.77 | 113 | 72.44 | 43 | 27.56 |
| 16. வத்தேகம | 445 | 61 | 13.71 | 66 | 14.83 | 122 | 27.42 | 109 | 24.49 | 358 | 80.45 | 87 | 19.55 |
| 17. கட்டுகஸ்தொட்ட | 734 | 96 | 13.08 | 75 | 10.22 | 174 | 23.71 | 221 | 30.11 | 566 | 77.11 | 168 | 22.89 |
| 18. மாத்தளை | 642 | 77 | 11.99 | 94 | 14.64 | 170 | 26.48 | 209 | 32.55 | 550 | 85.67 | 92 | 14.33 |
| 19. கலேவெல | 194 | 13 | 6.70 | 29 | 14.95 | 57 | 29.38 | 69 | 35.57 | 168 | 86.60 | 26 | 13.40 |
| 20. நாஉல | 19 | 3 | 15.79 | 2 | 10.53 | 2 | 10.53 | 11 | 57.89 | 18 | 94.74 | 1 | 5.26 |
| 21. வில்கமுவ | 47 | 5 | 10.64 | 11 | 23.40 | 7 | 14.89 | 17 | 36.17 | 40 | 85.11 | 7 | 14.89 |
| 22. நுவரெலியா | 552 | 45 | 8.15 | 42 | 7.61 | 98 | 17.75 | 215 | 38.95 | 400 | 72.46 | 152 | 27.54 |
| 23. கொத்மலை | 266 | 33 | 12.41 | 33 | 12.41 | 73 | 27.44 | 77 | 28.95 | 216 | 81.20 | 50 | 18.80 |
| 24. ஹட்டன் | 696 | 102 | 14.66 | 89 | 12.79 | 140 | 20.11 | 220 | 31.61 | 551 | 79.17 | 145 | 20.83 |
| 25. வலப்பனை | 166 | 13 | 7.83 | 9 | 5.42 | 56 | 33.73 | 63 | 37.95 | 141 | 84.94 | 25 | 15.06 |
| 26. ஹங்குரன்கெத்த | 297 | 26 | 8.75 | 42 | 14.14 | 100 | 33.67 | 94 | 31.65 | 262 | 88.22 | 35 | 11.78 |
| 27. காலி | 3098 | 925 | 29.86 | 534 | 17.24 | 733 | 23.66 | 584 | 18.85 | 2776 | 89.61 | 322 | 10.39 |
| 28. எல்பிட்டிய | 877 | 178 | 20.30 | 151 | 17.22 | 258 | 29.42 | 185 | 21.09 | 772 | 88.03 | 105 | 11.97 |
| 29. அம்பலாங்கொடை | 1590 | 425 | 26.73 | 281 | 17.67 | 385 | 24.21 | 299 | 18.81 | 1390 | 87.42 | 200 | 12.58 |
| 30. உடுகம | 385 | 94 | 24.42 | 70 | 18.18 | 113 | 29.35 | 83 | 21.56 | 360 | 93.51 | 25 | 6.49 |
| 31. மாத்தறை | 1955 | 812 | 41.53 | 310 | 15.86 | 430 | 21.99 | 297 | 15.19 | 1849 | 94.58 | 106 | 5.42 |
| 32. அக்குரஸ்ஸ | 398 | 108 | 27.14 | 47 | 11.81 | 96 | 24.12 | 88 | 22.11 | 339 | 85.18 | 59 | 14.82 |
| 33. முலடியன-ஹக்மன | 411 | 80 | 19.46 | 78 | 18.98 | 102 | 24.82 | 110 | 26.76 | 370 | 90.02 | 41 | 9.98 |
| 34. மொறவக்க | 489 | 102 | 20.86 | 96 | 19.63 | 126 | 25.77 | 113 | 23.11 | 437 | 89.37 | 52 | 10.63 |

| கல்வி வலயம் | தோற்றியோர் எண்ணிக்கை | மிகச் சிறந்த சித்தி (A) பெற்றவர் | | விசேட திறமைச் சித்தி (B) பெற்றவர் | | திறமைச் சித்தி (C) பெற்றவர் | | சாதாரண சித்தி (S) பெற்றவர் | | சித்தி (A+B+C+S) பெற்றவர் | | சித்தி யடையாதவர் (W) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| 35. தங்காலை | 540 | 139 | 25.74 | 107 | 19.81 | 146 | 27.04 | 121 | 22.41 | 513 | 95.00 | 27 | 5.00 |
| 36. அம்பாந்தோட்டை | 700 | 122 | 17.43 | 101 | 14.43 | 188 | 26.86 | 209 | 29.86 | 620 | 88.57 | 80 | 11.43 |
| 37. வலஸ்முல்லை | 441 | 152 | 34.47 | 87 | 19.73 | 117 | 26.53 | 59 | 13.38 | 415 | 94.10 | 26 | 5.90 |
| 38. யாழ்ப்பாணம் | 1414 | 409 | 28.93 | 262 | 18.53 | 375 | 26.52 | 255 | 18.03 | 1301 | 92.01 | 113 | 7.99 |
| 39. தீவகம் | 82 | 7 | 8.54 | 5 | 6.10 | 20 | 24.39 | 30 | 36.59 | 62 | 75.61 | 20 | 24.39 |
| 40. தென்மராட்சி | 201 | 72 | 35.82 | 44 | 21.89 | 41 | 20.40 | 35 | 17.41 | 192 | 95.52 | 9 | 4.48 |
| 41. வலிகாமம் | 619 | 108 | 17.45 | 85 | 13.73 | 169 | 27.30 | 173 | 27.95 | 535 | 86.43 | 84 | 13.57 |
| 42. வடமராட்சி | 593 | 124 | 20.91 | 102 | 17.20 | 136 | 22.93 | 141 | 23.78 | 503 | 84.82 | 90 | 15.18 |
| 43. கிளிநொச்சி | 357 | 38 | 10.64 | 50 | 14.01 | 80 | 22.41 | 112 | 31.37 | 280 | 78.43 | 77 | 21.57 |
| 44. மன்னார் | 293 | 49 | 16.72 | 33 | 11.26 | 64 | 21.84 | 90 | 30.72 | 236 | 80.55 | 57 | 19.45 |
| 45. மடு | 18 | 1 | 5.56 | 1 | 5.56 | 9 | 50.00 | 5 | 27.78 | 16 | 88.89 | 2 | 11.11 |
| 46. வவுனியா - தெற்கு | 648 | 151 | 23.30 | 113 | 17.44 | 165 | 25.46 | 151 | 23.30 | 580 | 89.51 | 68 | 10.49 |
| 47. வவுனியா - வடக்கு | 55 | 8 | 14.55 | 10 | 18.18 | 10 | 18.18 | 18 | 32.73 | 46 | 83.64 | 9 | 16.36 |
| 48. முல்லைத்தீவு | 168 | 20 | 11.90 | 26 | 15.48 | 58 | 34.52 | 39 | 23.21 | 143 | 85.12 | 25 | 14.88 |
| 49. துணுக்காய் | 52 | 2 | 3.85 | 5 | 9.62 | 10 | 19.23 | 21 | 40.38 | 38 | 73.08 | 14 | 26.92 |
| 50. மட்டக்களப்பு | 575 | 172 | 29.91 | 104 | 18.09 | 165 | 28.70 | 116 | 20.17 | 557 | 96.87 | 18 | 3.13 |
| 51. கல்குடா | 145 | 30 | 20.69 | 29 | 20.00 | 44 | 30.34 | 29 | 20.00 | 132 | 91.03 | 13 | 8.97 |
| 52. பட்டிருப்பு | 126 | 38 | 30.16 | 18 | 14.29 | 38 | 30.16 | 20 | 15.87 | 114 | 90.48 | 12 | 9.52 |
| 53. மட்டக்களப்பு -மத்தி | 580 | 126 | 21.72 | 95 | 16.38 | 140 | 24.14 | 166 | 28.62 | 527 | 90.86 | 53 | 9.14 |
| 54. மட்டக்களப்பு -மேல் | 73 | 7 | 9.59 | 7 | 9.59 | 29 | 39.73 | 22 | 30.14 | 65 | 89.04 | 8 | 10.96 |
| 55. அம்பாறை | 134 | 11 | 8.21 | 25 | 18.66 | 51 | 38.06 | 32 | 23.88 | 119 | 88.81 | 15 | 11.19 |
| 56. கல்முனை | 422 | 80 | 18.96 | 56 | 13.27 | 84 | 19.91 | 139 | 32.94 | 359 | 85.07 | 63 | 14.93 |
| 57. சம்மாந்துறை | 182 | 32 | 17.58 | 26 | 14.29 | 40 | 21.98 | 51 | 28.02 | 149 | 81.87 | 33 | 18.13 |
| 58. மஹாஓய | 106 | 18 | 16.98 | 18 | 16.98 | 24 | 22.64 | 31 | 29.25 | 91 | 85.85 | 15 | 14.15 |
| 59. தெஹியத்தகண்டிய | 218 | 65 | 29.82 | 53 | 24.31 | 67 | 30.73 | 29 | 13.30 | 214 | 98.17 | 4 | 1.83 |
| 60. அக்கரைப்பற்று | 513 | 70 | 13.65 | 69 | 13.45 | 119 | 23.20 | 173 | 33.72 | 431 | 84.02 | 82 | 15.98 |
| 61. திருக்கோவில் | 45 | 11 | 24.44 | 11 | 24.44 | 13 | 28.89 | 8 | 17.78 | 43 | 95.56 | 2 | 4.44 |
| 62. திருகோணமலை | 923 | 181 | 19.61 | 138 | 14.95 | 264 | 28.60 | 202 | 21.89 | 785 | 85.05 | 138 | 14.95 |
| 63. மூதூர் | 64 | 19 | 29.69 | 17 | 26.56 | 20 | 31.25 | 6 | 9.38 | 62 | 96.88 | 2 | 3.13 |
| 64. கந்தளாய் | 130 | 17 | 13.08 | 25 | 19.23 | 47 | 36.15 | 28 | 21.54 | 117 | 90.00 | 13 | 10.00 |
| 65. கிண்ணியா | 51 | 6 | 11.76 | 7 | 13.73 | 10 | 19.61 | 15 | 29.41 | 38 | 74.51 | 13 | 25.49 |
| 66. திருகோணமலை (வடக்கு) | 37 | 2 | 5.41 | 2 | 5.41 | 8 | 21.62 | 14 | 37.84 | 26 | 70.27 | 11 | 29.73 |
| 67. குருநாகல் | 1171 | 367 | 31.34 | 241 | 20.58 | 289 | 24.68 | 214 | 18.27 | 1111 | 94.88 | 60 | 5.12 |
| 68. குளியாப்பிட்டிய | 709 | 195 | 27.50 | 159 | 22.43 | 174 | 24.54 | 132 | 18.62 | 660 | 93.09 | 49 | 6.91 |
| 69 நிக்கவெரட்டிய | 275 | 40 | 14.55 | 47 | 17.09 | 75 | 27.27 | 84 | 30.55 | 246 | 89.45 | 29 | 10.55 |
| 70. மாகோ | 284 | 55 | 19.37 | 43 | 15.14 | 92 | 32.39 | 66 | 23.24 | 256 | 90.14 | 28 | 9.86 |
| 71. கிரியுள்ள | 838 | 134 | 15.99 | 140 | 16.71 | 240 | 28.64 | 223 | 26.61 | 737 | 87.95 | 101 | 12.05 |
| 72. இப்பாகமுவ | 423 | 103 | 24.35 | 78 | 18.44 | 104 | 24.59 | 100 | 23.64 | 385 | 91.02 | 38 | 8.98 |
| 73. புத்தளம் | 981 | 159 | 16.21 | 141 | 14.37 | 240 | 24.46 | 308 | 31.40 | 848 | 86.44 | 133 | 13.56 |
| 74. சிலாபம் | 2090 | 505 | 24.16 | 357 | 17.08 | 499 | 23.88 | 486 | 23.25 | 1847 | 88.37 | 243 | 11.63 |

| கல்வி வலயம் | தோற்றியோர் எண்ணிக்கை | மிகச் சிறந்த சித்தி (A) பெற்றவர் | | விசேட திறமைச் சித்தி (B) பெற்றவர் | | திறமைச் சித்தி (C) பெற்றவர் | | சாதாரண சித்தி (S) பெற்றவர் | | சித்தி (A+B+C+S) பெற்றவர் | | சித்தி யடையாதவர் (W) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| 75. அனுராதபுரம் | 1271 | 317 | 24.94 | 199 | 15.66 | 303 | 23.84 | 294 | 23.13 | 1113 | 87.57 | 158 | 12.43 |
| 76. தபுத்தேகம | 352 | 53 | 15.06 | 44 | 12.50 | 92 | 26.14 | 104 | 29.55 | 293 | 83.24 | 59 | 16.76 |
| 77. கெக்கிராவ | 311 | 43 | 13.83 | 57 | 18.33 | 83 | 26.69 | 84 | 27.01 | 267 | 85.85 | 44 | 14.15 |
| 78. கலென்பின்துனுவெவ | 213 | 20 | 9.39 | 20 | 9.39 | 88 | 41.31 | 55 | 25.82 | 183 | 85.92 | 30 | 14.08 |
| 79. கெபித்திகொல்லாவ | 229 | 47 | 20.52 | 37 | 16.16 | 63 | 27.51 | 60 | 26.20 | 207 | 90.39 | 22 | 9.61 |
| 80. பொலன்னறுவ | 446 | 120 | 26.91 | 76 | 17.04 | 103 | 23.09 | 97 | 21.75 | 396 | 88.79 | 50 | 11.21 |
| 81. ஹிங்குரக் கொடை | 452 | 56 | 12.39 | 72 | 15.93 | 144 | 31.86 | 120 | 26.55 | 392 | 86.73 | 60 | 13.27 |
| 82. திம்புலாகல | 260 | 26 | 10.00 | 38 | 14.62 | 88 | 33.85 | 70 | 26.92 | 222 | 85.38 | 38 | 14.62 |
| 83. பதுளை | 817 | 98 | 12.00 | 92 | 11.26 | 185 | 22.64 | 246 | 30.11 | 621 | 76.01 | 196 | 23.99 |
| 84. பண்டாரவளை | 929 | 188 | 20.24 | 127 | 13.67 | 202 | 21.74 | 250 | 26.91 | 767 | 82.56 | 162 | 17.44 |
| 85. மஹியங்கனை | 157 | 35 | 22.29 | 25 | 15.92 | 46 | 29.30 | 35 | 22.29 | 141 | 89.81 | 16 | 10.19 |
| 86. வெலிமடை | 475 | 39 | 8.21 | 54 | 11.37 | 109 | 22.95 | 165 | 34.74 | 367 | 77.26 | 108 | 22.74 |
| 87. பசறை | 160 | 7 | 4.38 | 7 | 4.38 | 50 | 31.25 | 71 | 44.38 | 135 | 84.38 | 25 | 15.63 |
| 88. மொனராகலை | 230 | 36 | 15.65 | 34 | 14.78 | 61 | 26.52 | 52 | 22.61 | 183 | 79.57 | 47 | 20.43 |
| 89. வெல்லவாய | 238 | 41 | 17.23 | 38 | 15.97 | 66 | 27.73 | 64 | 26.89 | 209 | 87.82 | 29 | 12.18 |
| 90. பிபிலை | 165 | 17 | 10.30 | 21 | 12.73 | 40 | 24.24 | 55 | 33.33 | 133 | 80.61 | 32 | 19.39 |
| 91. இரத்தினபுரி | 1760 | 603 | 34.26 | 303 | 17.22 | 405 | 23.01 | 301 | 17.10 | 1612 | 91.59 | 148 | 8.41 |
| 92. பலாங்கொடை | 583 | 129 | 22.13 | 97 | 16.64 | 145 | 24.87 | 131 | 22.47 | 502 | 86.11 | 81 | 13.89 |
| 93. நிவித்திகல | 380 | 60 | 15.79 | 56 | 14.74 | 117 | 30.79 | 104 | 27.37 | 337 | 88.68 | 43 | 11.32 |
| 94. எம்பிலிபிடிய | 674 | 82 | 12.17 | 74 | 10.98 | 172 | 25.52 | 206 | 30.56 | 534 | 79.23 | 140 | 20.77 |
| 95. கேகாலை | 1152 | 305 | 26.48 | 197 | 17.10 | 293 | 25.43 | 244 | 21.18 | 1039 | 90.91 | 113 | 9.81 |
| 96. மாவனல்லை | 674 | 103 | 15.28 | 94 | 13.95 | 211 | 31.31 | 200 | 29.67 | 608 | 90.21 | 66 | 9.79 |
| 97. தெஹிஓவிட்ட | 606 | 72 | 11.88 | 76 | 12.54 | 166 | 27.39 | 186 | 30.69 | 500 | 82.51 | 106 | 17.49 |
| **நாடு முழுவதிலும்** | **85946** | **21693** | **25.24** | **13830** | **16.09** | **20800** | **24.20** | **18887** | **21.98** | **75210** | **87.50** | **10736** | **12.49** |

**அட்டவணை 4**

## 1.2.5 வகுப்பாயிடை அடிப்படையில் புள்ளிகள் பெற்ற விதம்

| வகுப்பாயிடை | மீடிறன் | சதவீத மீடிறன் | திரள் மீடிறன் | சதவீத திரள் மீடிறன் |
|---|---|---|---|---|
| 91 - 100 | 1805 | 1.81 | 99553 | 100 |
| 81 - 90 | 9340 | 9.38 | 97748 | 98.19 |
| 71 - 80 | 14946 | 15.01 | 88408 | 88.80 |
| 61 - 70 | 15936 | 16.01 | 73462 | 73.79 |
| 51 - 60 | 16648 | 16.72 | 57526 | 57.78 |
| 41 - 50 | 15208 | 15.28 | 40878 | 41.06 |
| 31 - 40 | 13613 | 13.67 | 25670 | 25.79 |
| 21 - 30 | 8554 | 8.59 | 12057 | 12.11 |
| 11 - 20 | 3268 | 3.28 | 3503 | 3.52 |
| 01 - 10 | 235 | 0.24 | 235 | 0.24 |
| 00 - 00 | 0 | 0.00 | 0 | 0.00 |

**அட்டவணை 5**

**மேலே தரப்பட்டுள்ள அட்டவணையிலிருந்து தகவல்களைப் பெறும் முறை பின்வரும் உதாரணத்தின் மூலம் காட்டப்பட்டுள்ளது.**

உதாரணம் : (31 - 40 இற்கு இடைப்பட்ட வகுப்பாயிடையைக் கருதுவோம்.)
இப்பாடத்தில் 31 - 40 வகுப்பாயிடையில் புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள் 13613 பேர் உள்ளனர். இது 13.68% ஆகும். 40 புள்ளிகளுக்குக் குறைவாக எடுத்த மாணவர்கள் 25670 பேர் உள்ளனர். இது 25.79% ஆகும்.

## 1.3 பாட அடைவு பற்றிய பகுப்பாய்வு

### 1.3.1 வினாப்பத்திரம் 1 இல் பெறப்பட்டுள்ள அடைவு




**வரைபு** 1 (இது RD/16/05/OL படிவங்கள் மூலம் பெறப்பட்ட தகவல்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது.)

இவ்வரைபிலிருந்து தகவல்களைப் பெறும்முறை பின்வரும் உதாரணம் மூலம் விளக்கப்படுகிறது.

உதாரணம் - கூடுதலானோர் 1 ஆம் வினாவுக்கே சரியாக விடையளித்துள்ளனர். அதன் வீதம் 96% ஆகும். அதே போன்று பரீட்சார்த்திகளில் குறைந்த தொகையினர் 17 ஆம் வினாவுக்கே சரியான விடையளித்துள்ளனர். அதன் வீதம் 11% ஆகும்.

## 1.3.2 வினாப்பத்திரம் II இல் வினாக்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள விதம்.




இவ்வரைபில் தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் முறை பின்வரும் உதாரணத்தின் மூலம் காட்டப்பட்டுள்ளது.

உதாரணம் -

வினாக்களைத் தெரிவு செய்யும் போது 92% ஆனோர் 3 ஆவது வினாவைத் தெரிவு செய்திருந்ததுடன் 4 ஆம் வினாவினை 47% ஆனோர் மாத்திரமே தெரிவு செய்திருந்தனர்.

**வரைபு 2** - (RD/16/02/OL படிவத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது.)

## 1.3.3 வினாப்பத்திரம் II இல் புள்ளிகள் பெற்றுள்ள விதம்




இவ்வரைபில் தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் முறை பின்வரும் உதாரணத்தின் மூலம் காட்டப்பட்டுள்ளது.

உதாரணம்

வினா 1 இற்கு வழங்கப்பட்ட மொத்தப் புள்ளிகள் 20 ஆகும். இப்புள்ளிகளில் வகுப்பாயிடை 76-100% புள்ளி இடைவெளியில் அதாவது 16-20 புள்ளிகளைப் பெற்றோரும். 51-75% புள்ளியிடைவெளியில் அதாவது 11-15 வரை புள்ளிகளைப் பெற்றோரும் 26-50% புள்ளியிடை வெளியில் 6-10 வரை புள்ளிகளைப் பெற்றோரும் 0-25% புள்ளியிடைவெளியில் 0-5 வரை புள்ளிகளைப் பெற்றோரும் உள்ளடக்கப்படுகின்றனர். அதற்கேற்ப 16-20 புள்ளிகளைப் பெற்ற பரீட்சார்த்திகள் 19.5% ஆகும். அத்துடன் 00-05 வரை புள்ளிகளைப் பெற்ற பரீட்சார்த்திகள் 15% ஆகும்.

**வரைபு 3** - (RD/16/02/OL படிவத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது.)

இங்கு 2-7 வரையான வினாக்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகள் 10 ஆகும். அதற்கேற்ப ஆயிடையில் உள்ளடக்கப்படும் புள்ளிகளின் வரையறை வேறுபடல் வேண்டும்.

## 1.3.4 வினாப்பத்திரம் II இல் பெறப்பட்ட அடைவு

க. பொ. த. (சா.தர)ப் பரீட்சை - 2012
60 - வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் வினாப்பத்திரம் II
வினாக்களுக்கான இலகுச்சுட்டி




**வரைபு 4.1** (இது RD/16/05/OL படிவங்கள் மூலம் பெறப்பட்ட தகவல்களைக் கொண்டு தரப்பட்டுள்ளது.)
மேலே தரப்பட்டுள்ள வரைபிலிருந்து தகவல்களைப் பெறும்முறை கீழேயுள்ள உதாரணம் மூலம் காட்டப்பட்டுள்ளது.

உதாரணம் : முதலாம் வினாவில் (i) உப பிரிவின் இலகுதன்மை 91% ஆகக் காணப்படுவதுடன், இவ்வினாவில் (ix) ஆம் பிரிவின் இலகுதன்மை 12% ஆகும்.

# பகுதி II

## 2. வினாக்களும் அவற்றிற்கு விடையளிக்கப்பட்டமை தொடர்பான விபரங்களும்

### 2.1 வினாப்பத்திரம் I

#### 2.1.1 வினாப்பத்திரம் I கட்டமைப்பு

நேரம் :- 1 மணித்தியாலம் (முழு வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பதற்குரிய 3 மணித்தியாலத்தில் (03) ஒரு மணித்தியாலம் (01) வினாப்பத்திரம் I இற்கு விடையளிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.)

* மொத்தப் புள்ளிகள் 40 ஆகும்.
* இவ்வினாப்பத்திரம் நான்கு விடைகளைக் கொண்ட 40 பல்தேர்வு வினாக்கள் உள்ளடக்கியது. இவ் ஒவ்வொரு வினாக்களுக்கும் உரிய (1), (2), (3), (4) ஆகிய தெரிவுகளில் சரியான அல்லது மிகவும் பொருத்தமான தெரிவை தெரிவு செய்தல் எதிர்பார்க்கப்படுகின்றது.
* 1-20 வரையான வினாக்கள் வணிகக் கல்வியிலும் 21-40 வரையான வினாக்கள் கணக்கீட்டிலிருந்தும் எடுக்கப்பட்டுள்ளன.
* சகல வினாக்களுக்கும் விடையளித்தல் கட்டாயமானதாகும்.
* மொத்தப் புள்ளிகள் (40x1) = 40 புள்ளிகள்

## 2.1.2 வினாப்பத்திரம் I

- பின்வரும் கூற்றைப் பயன்படுத்தி **01** தொடக்கம் **05** வரையுள்ள வினக்களுக்கு விடை தருக.

"**வணிகங்களினால்** உற்பத்தி செய்யப்படும் **பொருட்கள், சேவைகளின்** மூலம் உமது நாளாந்த வாழ்க்கையில **தேவைகள், விருப்பங்கள்** போன்றவற்றை நிறைவேற்றும் பல பொருட்கள் உமக்குக் கிடைக்கப் பெறுகின்றன.' ஒவ்வொரு வணிகத்தையும் அவற்றின் **உரிமை, தன்மை** ஆகியவற்றின் அடிப்படையில் வகைப்படுத்த முடியும்.

1. பின்வரும் கூற்றுகளில் இருந்து "வணிகம்" என்பதற்கு மிகவும் பொருத்தமான வரைவிலக்கணத்தைத் தெரிவுசெய்க
   (1) பொருட்கள், சேவைகளைப் பரிமாற்றுகின்ற எந்தவொரு நடவடிக்கையுடனும் தொடர்புடையதாகும்.
   (2) பொருட்கள், சேவைகளை வாங்குகின்ற விற்கின்ற எந்தவொரு நடவடிக்கையுடனும் தொடர்புடையதாகும்
   (3) பொருட்கள், சேவைகளை உற்பத்தி செய்கின்ற எந்தவொரு நடவடிக்கையுடனும் தொடர்புடையதாகும்.
   (4) மனிதத் தேவைகளையும் விருப்பங்களையும் திருப்தி செய்வதற்காகப் பொருட்கள், சேவைகளை வழங்குகின்ற எந்தவொரு நடவடிக்கையுடனும் தொடர்புடையதாகும்.

2. வணிகங்கள் ஆரம்பித்தது
   (1) பண்டமாற்று முறையின் விளைவாக (2) பணப் பாவனையின் விளைவாக
   (3) போக்குவரத்து முறையின் விளைவாக (4) கைத்தொழில் புரட்சியின் விளைவாக

3. பின்வருவனவற்றுள் விருப்பமாகக் கருதப்படுவது எது ?
   (1) உணவுகள் (2) சோறு (3) உடைகள் (4) இருப்பிடம்

4. உரிமையின் பிரகாரம் வணிகத்தின் பிரதான வகைப்படுத்தலைச் சரியாக எடுத்துக்காட்டும் விடை எது என்பதனைத் தெரிவுசெய்க.
   (1) முதனிலை, இரண்டாம் நிலை (2) சிற்றளவு, பேரளவு
   (3) தனியுடைமை, பங்குடைமை (4) தனியார் துறை, பொதுத் துறை (அரச)

5. உற்பத்திச் செயன்முறையைச் சரியாக எடுத்துக்காட்டும் விடையைத் தெரிவுசெய்க.
   (1) செயன்முறை → உள்ளீடுகள் → வெளியீடுகள்
   (2) வெளியீடுகள் → செயன்முறை → உள்ளீடுகள்
   (3) உள்ளீடுகள் → செயன்முறை → வெளியீடுகள்
   (4) உள்ளீடுகள் → வெளியீடுகள் → செயன்முறை

6. வணிகத்தின் அகச்சூழல் தொடர்பான ஒரு பலத்தையும் புறச்சூழல் தொடர்பான ஒரு வாய்ப்பையும் ஒழுங்குமுறையில் எடுத்துக்காட்டும் விடையைத் தெரிவுசெய்க.
   (1) சிறந்த நிதி உறுதித் தன்மையும் வினைத்திறனான முகாமையாளர்களின் கிடைப்பனவுத் தன்மையும்
   (2) உள்ளூர் உற்பத்திப்பொருட்களுக்கான மதிப்புயர்வும் சனத்தொகை வயது அதிகரித்தலும்
   (3) வணிகங்களுக்கு ஆதரவான விதிகளை விதித்தலும் சரியான வணிகத் திட்டம் காணப்படுதலும்
   (4) திறனுள்ள ஊழியர்கள் கிடைக்கக்கூடியதாக இருத்தலும் தொழில்வாய்ப்பில் பெண்களின் ஈடுபாடும்

7. 'வணிக நடவடிக்கைகளின் வினைத்திறனை அதிகரிப்பதற்குத் தற்போதைய கணினிகளும் இணையமும் மிகவும் உதவியாகக் காணப்படுகிறன.' மேற்குறித்த கூற்றில் இருந்து இது என்ன வணிகச் சூழல் காரணி என்பதனை ஊகிக்க முடியும் ?
   (1) பொருளாதாரச் சூழல் (2) தொழினுட்பச் சூழல் (3) மக்கட்தொகைச் சூழல் (4) அரசியற் சூழல்

8. செயற்பாட்டுத் திட்டத்தில் மட்டும் உள்ளடங்கியுள்ள உருப்படியைத் (விடையை) தெரிவுசெய்க.
   (1) மதிப்பிடப்பட்ட விற்பனைகள் (2) மதிப்பிடப்பட்ட மூலப்பொருள் கிரயம்
   (3) மதிப்பிடப்பட்ட நிலையான சொத்துக்கள் (4) மதிப்பிடப்பட்ட இலாபம்

9. மொத்த உற்பத்திக் கிரயத்தைச் சரியாக எடுத்துக்காட்டும் கூற்றைத் தெரிவுசெய்க.
   (1) நேர் மூலப்பொருட் கிரயம் + நேர் ஊழியக் கிரயம் + ஏனைய நேர்ச் செலவுகள் + உற்பத்தி மேந்தலைகள்
   (2) நேர் மூலப்பொருட் கிரயம் + நேர் ஊழியக் கிரயம் + ஏனைய நேர்ச் செலவுகள் + மூலக் கிரயம்
   (3) மறைமுக மூலப்பொருட் கிரயம் + மறைமுக ஊழியக் கிரயம் + ஏனைய மறைமுகச் செலவுகள் + உற்பத்தி மேந்தலைகள்
   (4) நேர் மூலப்பொருட் கிரயம் + நேர் ஊழியக் கிரயம் + மூலக் கிரயம் + உற்பத்தி மேந்தலைகள்

10. வணிகத் திட்டத்தைத் தயாரிக்கும்போது மதிப்பிடப்பட்ட இலாபம் உள்ளடக்கப்பட வேண்டியது,
   (1) மதிப்பிடப்பட்ட காசுப் பாய்ச்சற் கூற்றில் (2) மதிப்பிடப்பட்ட வருமானக் கூற்றில்
   (3) மதிப்பிடப்பட்ட ஐந்தொகையில் (4) வியாபார இலாப நட்டக் கணக்கில்

11. வணிகத் திட்டமொன்றைத் தயாரிப்பதன் மூலம் வணிகர் ஒருவருக்கான மிகவும் **முக்கியமான** அனுகூலம்
(1) நிதியை இலகுவாகப் பெறமுடிதல்
(2) தேவையான வளங்களை இனங்காண முடிதல்
(3) ஊழியர்களுக்கு வணிகத்தைப் பற்றிய தெளிவை வழங்கக்கூடியதாக இருத்தல்
(4) வணிகத்தின் இலக்குகளை அடைவதற்குச் சரியான வழிகாட்டலை வழங்கக்கூடியதாக இருத்தல்

12. கூட்டுறவுச் சங்கமொன்று பதிவுசெய்யப்பட வேண்டியது
(1) கம்பனிப் பதிவாளர் அலுவலகத்தில்
(2) கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் அலுவலகத்தில்
(3) பிரதேசச் செயலக அலுவலகத்தில்
(4) தேசிய கூட்டுறவு சபை அலுவலகத்தில்

13. வணிக வங்கிகளால் வழங்கப்படும் சேவைகள் X நிரலிலும் அவற்றுக்கான சில உதாரணங்கள் Y நிரலிலும் தரப்படுகின்றன.

| X | Y |
|---|---|
| 1. வைப்புகளை ஏற்றல் | A - மேலதிகப்பற்றுக்கள் |
| 2. கடன் வசதிகளை அளித்தல் | B - கடன் அட்டைகள் |
| 3. இலத்திரனியல் பண வசதிகள் | C - U. S. டொலர்களை கொள்வனவு செய்தல் |
| 4. வெளிநாட்டு நாணய மாற்றல்கள் | D - நடைமுறைக் கணக்குகள் |

X நிரலிலுள்ள சேவைகளுக்குப் பொருந்தக்கூடியதாக Y நிரலிலுள்ள உதாரணங்களை ஒழுங்குமுறையில் எடுத்துக்காட்டும் விடை
(1) B, D, A, C
(2) D, C, A, B
(3) D, A, B, C
(4) D, A, C, B

14. பின்வரும் கூற்றுகளிலிருந்து சரியான கூற்றைத் தெரிவுசெய்க.
(1) குறுக்குக் கோடிட்ட காசோலை ஒன்றுக்கு வங்கிக் கருமபீடத்தில் பணத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்.
(2) காசோலையை வரைபவரால் மட்டுமே காசோலை ஒன்றுக்குக் குறுக்குக் கோடிட முடியும்
(3) காசோலையினால் கொடுப்பனவொன்றைச் செய்வதற்கு வங்கி நடைமுறைக் கணக்கொன்று அவசியமில்லை.
(4) வணிக வங்கி ஒன்றே எப்பொழுதும் காசோலை ஒன்றின் வரைவுணி ஆகும்.

15. பின்வரும் வரிப்படம் தொடர்பாடல் செயன்முறையின் கூறுகளை எடுத்துக் காட்டுகின்றது.




மேலுள்ள வரிப்படத்தில் முறையே 2ஆம், 4ஆம் இடநிலைகளில் காணப்படக்கூடிய மிகவும் பொருத்தமான கூறுகளைத் தெரிவுசெய்க.
(1) செய்தி, சத்தம்
(2) சத்தம், பெறுபவர்
(3) செய்தி, பெறுபவர்
(4) பெறுபவர், செய்தி

16. பின்வருவன தொடர்பாடலில் பயன்படுத்தும் சில முறைகளாகும்.
A - ஊழியர் கூட்டம் (staff meeting)
B - அறிவித்தல் பலகை
C - உள்ளகத் தொடர்பாடல்
D - இலத்திரனியல் தபால்

மேற்கூறப்பட்டவற்றுள் உள்ளக வாய்மொழி மூலமான தொடர்பாடல் முறைகள்
(1) A யும் B யும் ஆகும்.
(2) A யும் C யும் ஆகும்.
(3) A யும் D யும் ஆகும்.
(4) C யும் D யும் ஆகும்.

17. காப்புறுதியுடன் தொடர்புபட்ட பின்வரும் கூற்றுகளுள் **பிழையானது** எது ?
(1) அடைவு வைக்கப்பட்ட நகைகள் மீது அடைவு பிடிப்பவர் காப்புறுதி செய்தகு நலனைக் கொண்டுள்ளார்.
(2) ஒரு தந்தையானவர் தனது மகனின் உயிரின் (ஆயுட்காலத்தின்) மீது காப்புறுதி செய்தகு நலனைக் கொண்டுள்ளார்.
(3) ஒரு கணவனானவர் தனது மனைவியின் உயிரின் (ஆயுட்காலத்தின்) மீது காப்புறுதி செய்தகு நலனைக் கொண்டுள்ளார்.
(4) மோட்டார் வாகன உரிமையாளர் ஆனவர் குத்தகைக்கு எடுக்கப்பட்ட தனது வாகனத்தின் மீது காப்புறுதி செய்தகு நலனைக் கொண்டுள்ளார்.

18. வரையறுத்த பொதுக் கம்பனி ஒன்றின் சாதாரண பங்குகளில் முதலீடு செய்வதனால் முதலீட்டாளர் ஒருவர் பெற்றுக்கொள்ளும் அனுகூலம்
(1) மூலதன ஆதாயங்கள் (இலாபங்கள்)
(2) வட்டிகள்
(3) நிலையான பங்கிலாபங்கள்
(4) திரண்ட பங்கிலாபங்கள்

19. முதலீடு ஒன்றின் வருவாய்க்கும் (திரும்பல்) இடருக்கும் இடையே உள்ள சரியான தொடர்பை எடுத்துக் காட்டும் விடை எது என்பதனைத் தெரிவு செய்க.
(1) வருவாய் உயரும்போது இடர் குறைவடைதல் (2) வருவாய் உயரும்போது இடர் உயர்வடைதல்
(3) வருவாய் குறையும்போது இடர் உயர்வடைதல் (4) வருவாய் இல்லை இடர் உயர்வடைதல்

20. பின்வரும் வணிகங்களுள் பங்குச் சந்தையில் பங்குகளை விற்பனை செய்வதற்கு அனுமதிக்கப்பட்டது
(1) வரையறுத்த சந்திரன் (தனியார்) கம்பனி (2) வரையறுத்த உற்பத்திக் கம்பனி
(3) செல்வன் அன்ட் சன்ஸ் (4) வரையறுத்த உமா (PLC) கம்பனி

21. கணக்கீட்டுச் சமன்பாட்டுடன் தொடர்பான சரியான கூற்றைத் தெரிவு செய்க.
(1) உடைமையாளரின் உரிமையில் இருந்து பொறுப்புக்களைக் கழித்த பின்னர் வரும் பெறுமதியானது வணிகத்தின் சொத்துக்களுக்குச் சமமானதாகும்.
(2) உடைமையாளரின் உரிமை காணப்படும் போது, சொத்துக்களின் பெறுமதியானது பொறுப்புக்களுக்குச் சமமானதாகும்.
(3) வங்கிக் கடன் பெறப்பட்டிருக்கும் போது, சொத்துக்களின் பெறுமதியானது உடைமையாளரின் உரிமைக்குச் சமமானதாகும்.
(4) சொத்துக்களில் இருந்து பொறுப்புக்களைக் கழித்த பின்னர் வரும் பெறுமதியானது உடைமையாளர் உரிமைக்குச் சமமானதாகும்.

22. வணிகமொன்றின் சொத்துக்கள், பொறுப்புக்கள் ஆகிய இரண்டிலும் அதிகரிப்பை ஏற்படுத்தும் ஒரு கொடுக்கல் வாங்கல்
(1) ரூபா. 50,000 வங்கிக்கடன் பெறல்
(2) ரூபா. 10,000 பெறுமதியான சரக்குகளைக் கடனுக்கு விற்றல்
(3) கடன்கொடுத்தோர் ஒருவருக்கு ரூபா. 10,000 செலுத்துதல்
(4) கடன்பட்டோன் ஒருவரிடமிருந்து ரூபா. 1000 பெற்றுக் கொள்ளுதல்

23. கொள்வனவுத் திருப்பங்களைப் பதிவு செய்வதற்குப் பயன்படுத்தப்படும் மூல ஆவணம்
(1) பட்டியல் (Invoice.) (2) வரவுத்தாள் (Debit note.)
(3) செலவுத்தாள் (Credit note.) (4) தரவாணை (Indent.)

24. பின்வரும் கூற்றுகளுள் சரியான கூற்றைத் தெரிவு செய்க.
(1) சில்லறைக் காசேட்டின் மீளநிரப்புதல் முறைமையின் பிரகாரம், மாதாந்தம் சமமான தொகை ஈடு செய்யப்படுதல் வேண்டும்.
(2) கொடுத்த கழிவு ஒரு வருமானமாகும், பெற்ற கழிவு ஒரு செலவினமாகும்.
(3) பற்றுக் (எடுப்பனவு) கணக்கு ஒரு செலவினக் கணக்கு ஆகும்.
(4) ஒரு முதன்மை ஏடாகவும் அதேவேளை பேரேட்டுக் கணக்காகவும் தொழிற்படுவதே காசேட்டின் தொழிற்பாடாகும்.

25. பின்வருவனவற்றுள் கொள்வனவு நாளேட்டில் பதியப்படும் கொடுக்கல்வாங்கல் எது ?
(1) ரூபா 5000 பெறுமதியான பொருட்கள் கடனுக்குக் கொள்வனவு செய்யப்பட்டது.
(2) ரூபா 5000 பெறுமதியான பொருட்கள் காசுக்குக் கொள்வனவு செய்யப்பட்டது.
(3) ரூபா 5000 பெறுமதியான அலுவலக உபகரணங்கள் கடனுக்குக் கொள்வனவு செய்யப்பட்டது.
(4) ரூபா 5000 பெறுமதியான அலுவலக உபகரணங்கள் காசுக்குக் கொள்வனவு செய்யப்பட்டது.

26. சிந்துஜன் வணிகத்தின் முற்பணமுறைச் சில்லறைக் காசேட்டின் பெறுமதி ரூபா 2000 ஆகும். டிசெம்பர் மாதத்தில் ரூபா 1950 செலவு செய்யப்பட்டது. முற்பண முறைச் சில்லறைக் காசேட்டின் பெறுமதி போதியதாகக் காணப்படாததால் அது ரூபா 3000 ஆக அதிகரிக்கப்பட்டதுடன், டிசெம்பர் 31 இல் மீளவும் நிரப்பப்பட்டது. மீளநிரப்பப்பட்ட தொகை எவ்வளவு ?
(1) ரூபா 1950 (2) ரூபா 2000 (3) ரூபா 2950 (4) ரூபா 3000

27. வணிகமொன்றின் காசேட்டில் வங்கிக் கட்டணங்கள் பதிவு செய்யப்டுவது
(1) வங்கிநிரலின் செலவுப் பக்கத்தில் (2) வங்கி நிரலின் வரவுப் பக்கத்தில்
(3) காசு நிரலின் செலவுப் பக்கத்தில் (4) காசு நிரலின் வரவுப் பக்கத்தில்

28. பொதுப் பேரேட்டில் கண்டுபிடிக்கப்பட்ட தவறொன்றைத் திருத்துவதற்கான இரட்டைப் பதிவு கீழே தரப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| தொங்கல் க/கு | வரவு ரூபா 2500 | |
| விற்பனைகள் க/கு | | செலவு ரூபா 2500 |

மேற்குறிப்பிட்ட இரட்டைப் பதிவு தொடர்பான சரியான விளம்பல் (Narration)
(1) கடன் விற்பனைகள் ரூபா 2500 ரூபா ஆனது இரு கணக்குகளிலும் பதியப்படாததனால் ஏற்பட்ட தவறைத் திருத்துதல்
(2) காசு விற்பனைகள் ரூபா 2500 காசேட்டில் மட்டுமே பதியப்பட்டதனால் ஏற்பட்ட தவறைத் திருத்துதல்
(3) கடன் விற்பனைகள் ரூபா 2500 விற்பனைக் கணக்கில் மட்டுமே பதியப்பட்டதனால் ஏற்பட்ட தவறைத் திருத்துதல்
(4) காசு விற்பனைகள் ரூபா 2500 விற்பனைக் கணக்கில் இரு முறை பதிந்ததனால் ஏற்பட்ட தவறைத் திருத்துதல்

29. பெற்ற வட்டிக் கணக்கு மீதி ரூபா 8500 ஆனது பரீட்சை மீதியின் செலவுப் பக்கத்தில் ரூபா 8000 எனப் பதியப்பட்டதனால் ஏற்பட்ட தவறைத் திருத்துவதற்காகத் தொங்கல் கணக்கானது
(1) ரூபா 1000 ஆல் வரவு வைக்கப்பட வேண்டும். (2) ரூபா 500 ஆல் செலவு வைக்கப்பட வேண்டும்.
(3) ரூபா 500 ஆல் வரவு வைக்கப்பட வேண்டும். (4) ரூபா 1000 ஆல் செலவு வைக்கப்பட வேண்டும்.

● பின்வரும் தகவலைப் பயன்படுத்தி **30** ஆம் **31** ஆம் வினாக்களுக்கு விடை தருக.

தாரகை விளையாட்டுக் கழகத்தில் 200 அங்கத்தவர்கள் காணப்படுவதுடன் அவர்களது மாதாந்த அங்கத்துவக் கட்டணம் ரூபா 10 ஆகும். 2011 ஆம் ஆண்டிற்காக 20 அங்கத்தவர்கள் எந்தவொரு அங்கத்துவப் பணத்தையும் செலுத்தவில்லை.

30. அங்கத்துவப் பணம் தொடர்பில் வருமானச் செலவு கணக்கிலும் ஐந்தொகையிலும் உள்ளடக்கப்பட வேண்டிய தொகையை முறையே எடுத்துக் காட்டும் விடையை தெரிவு செய்க.
(1) ரூபா 1800,ரூபா 200. (2) ரூபா 2000,ரூபா 200.
(3) ரூபா 21 600,ரூபா 2400. (4) ரூபா 24 000,ரூபா 2400.

31. இலாப நோக்குடைய நிறுவனங்களின் காசேட்டை ஒத்ததாக, இலாப நோக்கற்ற நிறுவனங்களால் தயாரிக்கப்படுவது
(1) பெறுவனவுகள் கொடுப்பனவுகள் கணக்கு (2) வருமானச் செலவு கணக்கு
(3) இலாப நட்டக் கணக்கு (4) வியாபாரக் கணக்கு

32. ரவியின் கணக்கில் இருந்து ரூபா 1500 ஐ அறவிட முடியாக் கடனாகப் பதிவழிப்பதன் ஒரு விளைவு
(1) சொத்துக்களில் ரூபா 1500 குறைவடைதல் (2) செலவுகளில் ரூபா 1500 குறைவடைதல்
(3) வருமானத்தில் ரூபா 1500 அதிகரித்தல் (4) பொறுப்புக்களில் ரூபா 1500 குறைவடைதல்

33. நிசானா வணிகத்தின் 2012.03.31 இற்காகத் தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதியில் உள்ளடங்கியுள்ள தளபாடங்களுக்கான பெறுமனத் தேய்வு ஏற்பாட்டுக் கணக்கு மீதியானது பதிவு செய்யப்பட வேண்டியது
(1) வியாபார கணக்கில் (2) இலாபநட்ட கணக்கில
(3) ஐநதொகையில் (4) காசுப்பாய்ச்சற் கூற்றில்

34. கருணாறதி வணிகத்தின் வருடாந்த காப்புறுதிக் கட்டணம் ரூபா 8000 ஆகும். ஆனால் அவர் 31.03.2012 இல் முடிவடைந்த ஆண்டிற்காக ரூபா 10 000 காப்புறுதிக் கட்டணமாககச் செலுத்தியுள்ளார். 31.03.2012 இற்காகத் தயாரிக்கப்பட்ட ஐந்தொகையில் இது எங்கு காட்டப்படும் ?
(1) நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் ரூபா 2000 சென்மதி காப்புறுதியாக
(2) நடைமுறைச் சொத்துக்களின் கீழ் ரூபா 2000 முற்பணமாகக் கொடுத்த காப்புறுதியாக
(3) நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் ரூபா 8000 சென்மதி காப்புறுதியாக
(4) நடைமுறைச் சொத்துக்களின் கீழ் ரூபா 10000 முற்பணமாகக் கொடுத்த காப்புறுதியாக

35. நேர்கோட்டு பெறுமானத்தேய்வு முறையின் பிரகாரம் நிலையான சொத்தொன்றின் வருடாந்த பெறுமானத் தேய்வுத் தொகையைக் கணிப்பதற்குப் பயன்படுத்தப்படும் சரியான சமன்பாடு (சூத்திரம்)

(1) $\dfrac{\text{சொத்தின் சந்தைப் பெறுமதி} - \text{எஞ்சிய பெறுமதி (Scrap value)}}{\text{பயனுள்ள ஆயுட்காலம்}}$

(2) $\dfrac{\text{சொத்தின் கிரயம்} - \text{எஞ்சிய பெறுமதி}}{\text{பயனுள்ள ஆயுட்காலம்}}$

(3) $\dfrac{\text{சொத்தின் கிரயம்} - \text{சொத்தின் சந்தைப் பெறுமதி}}{\text{பயனுள்ள ஆயுட்காலம்}}$

(4) $\dfrac{\text{சொத்தின் கிரயம்} - \text{சொத்தின் பெறுமானத் தேய்விடத்தக்க பெறுமதி}}{\text{பயனுள்ள ஆயுட்காலம்}}$

36. பின்வரும் கொடுக்கல்வாங்கல்களுள், வணிகமொன்றின் தேறிய இலாபத்தைக் குறைக்கின்றமையின் ஒரு விளைவு
(1) கடன்பட்டோரிடமிருந்து ரூபா 10 000 காசுபெறதல்
(2) கடன்கொடுத்தோருக்கு ரூபா 5000 செலுத்துதல்
(3) கடந்த வருடத்துக்கான சென்மதி காப்புறுதிக் கட்டணம் ரூபா 4000 செலுத்துதல்
(4) கடன்பட்டோரில் இருந்து ரூபா 1200 ஐ அறவிடமுடியாக் கடனாகப் பதிவழித்தல்

● பின்வரும் தகவலைப் பயன்படுத்தி **37** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.

31.03.2012 இற்காக தயாரிக்கப்பட்ட பிரகதீஸ்வரர் சில்லறை வணிகத்தின் பரீட்சை மீதி கீழே தரப்படுகின்றது

| | வரவு (ரூபா) | செலவு (ரூபா) |
|---|---|---|
| 01.04.2011இல் சரக்கிருப்பு | 13 500 | |
| கொள்வனவுகள் | 100 000 | |
| விற்பனைகள் | | 180 000 |
| விற்பனைத் திருப்பங்கள் | 3 500 | |
| கொள்வனவுத் திருப்பங்கள் | | 2 300 |
| மோட்டார் வாகனம் (கிரயத்தில்) | 350 000 | |
| கட்டடங்கள் (கிரயத்தில்) | 270 000 | |
| பெற்ற கழிவு | | 2 000 |
| சம்பளங்கள் | 17 000 | |
| பெற்ற தரகு | | 2 200 |
| பெற்ற வாடகை | | 1 500 |
| வங்கிக் கடன் வட்டி | 1 000 | |
| முதலீட்டின் மீதான வருமானம் | | 2 000 |
| வங்கிக்கடன் 12% | | 10 000 |
| மூலதனம் | | 600 000 |
| கையிலுள்ள காசு | 45 000 | |
| | 800 000 | 800 000 |

மேலதிக தகவல்கள்

1. 31.03.2012 இல் சரக்கிருப்பு ரூபா 18 000 ஆகும்
2. மோட்டார் வாகனங்களுக்கு நேர் கோட்டு முறையில் வருடாந்தம் 10% பெறுமானத் தேய்வு செய்யப்படுதல் வேண்டும்.

37. இவ்வணிகத்தின் 31.03.2012 இல் முடிவடைந்த ஆண்டிற்கான மொத்த இலாபம்
(1) ரூபா 80 000. (2) ரூபா 81 000. (3) ரூபா 83 300. (4) ரூபா 86 800.

38. இவ்வணிகத்தின் 31.03.2012 ல் முடிவடைந்த ஆண்டிற்காகத் தாயாரிக்கப்பட்ட இலாப நட்டக் கணக்கில் காணப்படும் வங்கிக் கடன் வட்டித் தொகை
(1) ரூபா 200. (2) ரூபா 800. (3) ரூபா 1000. (4) ரூபா 1200.

39. இவ்வணிகத்தின் 31.03.2012 இல் உள்ளவாறான மொத்த நிலையான சொத்துக்களின் தேறிய பெறுமதி
(1) ரூபா 270 000. (2) ரூபா 315 000. (3) ரூபா 585 000. (4) ரூபா 620 000.

40. இவ்வணிகத்தின் வியாபார ரீதியற்ற வருமானம்
(1) பெற்ற வட்டியும் பெற்ற வாடகையும் (2) பெற்ற தரகும் முதலீட்டு வருமானமும்
(3) பெற்ற வட்டியும் பெற்ற தரகும் (4) பெற்ற வாடகையும் முதலீட்டு வருமானமும்

❊ ❊

### 2.1.3 எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்

| வினா இல. | விடை | வினா இல. | விடை |
|---|---|---|---|
| 01 | 4 | 21 | 4 |
| 02 | 1 | 22 | 1 |
| 03 | 2 | 23 | 2 |
| 04 | 4 | 24 | 4 |
| 05 | 3 | 25 | 2 |
| 06 | 4 | 26 | 3 |
| 07 | 2 | 27 | 1 |
| 08 | 2 | 28 | 2 |
| 09 | 1 | 29 | 3 |
| 10 | 2 | 30 | 4 |
| 11 | 4 | 31 | 1 |
| 12 | 2 | 32 | 1 |
| 13 | 3 | 33 | 3 |
| 14 | 4 | 34 | 2 |
| 15 | 3 | 35 | 2 |
| 16 | 2 | 36 | 4 |
| 17 | 2 | 37 | 3 |
| 18 | 1 | 38 | 4 |
| 19 | 2 | 39 | 3 |
| 20 | 4 | 40 | 4 |

சரியான ஒரு விடைக்கு 01 புள்ளி வீதம் மொத்தப் புள்ளிகள் $1 \times 40 = 40$ புள்ளிகள்

## 2.1.4. வினாப்பத்திரம் I இற்கு விடையளித்த விதம் பற்றிய அவதானிப்பும் முடிவுகளும். (பாடப்பரப்பு ரீதியாக)




வரைபு 5




வரைபு 6

வரைபிற்கேற்ப கணக்கீட்டு வினாக்களை விடக் கூடுதலானோர் வணிகக் கல்வி வினாக்களுக்கே சரியான விடையளித்துள்ளனர். அதன் அதிகரிப்பு 5% ஆகும்.

2.1.5 **வினாப்பத்திரம் I இல் ஒவ்வொரு வினாவுக்கும் மாணவர்கள் தெரிவை மேற்கொண்ட விதம் (சதவீதத்தில்)**

| வினா இலக்கம் | சரியான தெரிவு | ஒவ்வொரு வினாவும் மாணவர் தெரிவு செய்த வீதம் | | | |
|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 |
| 1 | 4 | 1% | 1% | 1% | 97% |
| 2 | 1 | 83% | 10% | 1% | 6% |
| 3 | 2 | 4% | 86% | 7% | 3% |
| 4 | 4 | 3% | 2% | 22% | 73% |
| 5 | 3 | 4% | 2% | 92% | 2% |
| 6 | 4 | 12% | 8% | 8% | 72% |
| 7 | 2 | 2% | 95% | 2% | 1% |
| 8 | 2 | 16% | 43% | 26% | 15% |
| 9 | 1 | 71% | 11% | 6% | 12% |
| 10 | 2 | 8% | 38% | 18% | 36% |
| 11 | 4 | 4% | 5% | 2% | 89% |
| 12 | 2 | 12% | 54% | 17% | 17% |
| 13 | 3 | 6% | 2% | 88% | 4% |
| 14 | 4 | 15% | 41% | 6% | 38% |
| 15 | 3 | 2% | 2% | 92% | 4% |
| 16 | 2 | 13% | 78% | 4% | 5% |
| 17 | 2 | 50% | 11% | 3% | 36% |
| 18 | 1 | 40% | 16% | 24% | 20% |
| 19 | 2 | 18% | 64% | 12% | 6% |
| 20 | 4 | 21% | 28% | 15% | 36% |
| 21 | 4 | 15% | 9% | 7% | 69% |
| 22 | 1 | 89% | 5% | 3% | 3% |
| 23 | 2 | 16% | 62% | 20% | 2% |
| 24 | 4 | 14% | 7% | 15% | 64% |
| 25 | 1 | 64% | 17% | 10% | 8% |
| 26 | 3 | 19% | 6% | 63% | 12% |
| 27 | 1 | 52% | 17% | 25% | 6% |
| 28 | 2 | 11% | 52% | 21% | 16% |
| 29 | 3 | 5% | 37% | 55% | 3% |
| 30 | 4 | 28% | 44% | 8% | 20% |
| 31 | 1 | 62% | 23% | 8% | 7% |
| 32 | 1 | 76% | 7% | 7% | 10% |
| 33 | 3 | 6% | 35% | 57% | 2% |
| 34 | 2 | 14% | 74% | 5% | 7% |
| 35 | 2 | 7% | 62% | 10% | 21% |
| 36 | 4 | 4% | 11% | 17% | 68% |
| 37 | 3 | 15% | 10% | 63% | 12% |
| 38 | 4 | 7% | 5% | 25% | 63% |
| 39 | 3 | 6% | 11% | 58% | 25% |
| 40 | 4 | 14% | 22% | 21% | 43% |

**ஒவ்வொரு வினாவிற்குமான உரிய சரியான தெரிவை மேற்கொண்ட மாணவர் சதவீதம் நிழற்றப்பட்டுள்ளது.**

## 2.1.6 வினாப்பத்திரம் I இற்கு விடையளித்தல் தொடர்பான முழுமையான அவதானிப்புக்களும், முடிவுகளும், ஆலோசனைகளும்

இவ்வினாப்பத்திரம் 1-20 வரையான வினாக்கள் வணிகக்கல்விப் பாடத்துறையிலும் 21-40 வரையான வினாக்கள் கணக்கீட்டுப் பாடத்துறையிலும் உள்ளடக்கப்பட்டுள்ளன. பொதுவாக எடுத்து நோக்கும் போது கணக்கீட்டு வினாக்களை விட வணிகக் கல்வி வினாக்களுக்கு கூடுதலானோர் விடையளித்துள்ளனர். அது 5% அதிகரிப்பாகும்.

வணிகக் கல்விப் பாடத்துறையின் வினாக்களில் வினா இலக்கங்களான 8, 10, 14, 17, 18, 20 வினாக்கள் தவிர்ந்த ஏனைய சகல வினாக்களுக்கும் 50% த்திற்கும் மேற்பட்டோர் சரியான விடையளித்துள்ளனர். வினா இலக்கங்களான 8,10 என்பன "வணிகத் திட்டத்தின் உள்ளடக்கம்" தொடர்பிலான வினாக்களாகும். உள்ளடக்கத்திலுள்ள தகவல்கள் தொடர்பில் உரிய விளக்கமின்மையே சரியாக விடையளிக்காமைக்கான காரணமாகும். வினா இலக்கம் 14 இற்கு சரியாக விடையளிப்பதற்கு கூடுதலானோர் தவறியமைக்கான காரணம் காசோலையொன்றுடன் தொடர்புடைய தரப்பினர்களின் கருமங்கள் தொடர்பிலான விளக்கம் குறைவாக இருந்தமையே ஆகும். வினா இலக்கம் 17 இற்கு சரியாக விடையளிக்கும் தொகை குறைந்தமைக்கு காப்புறுதி உரிமை தொடர்பிலான நடைமுறை அறிவு குறைவாக இருந்தமையே காரணமாகும். வினா இலக்கம் 20 இற்கு சரியாக விடையளித்தோர் தொகை குறைந்தமைக்கு காரணம் வணிக அமைப்புக்களும் பங்குச் சந்தையும் தொடர்பில் கவனம் செலுத்தாமையினாலேயாகும். பாடத்தை உரிய முறையில் திட்டமிட்டு நடைமுறைப்படுத்துவதினூடாகவும் மதிப்பீட்டுச் செயற்பாடுகளில் ஈடுபடச் செய்வதினூடாகவும் இந்நிலைமையினைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

கணக்கீட்டுத் துறையில் 30 ஆம் வினா தவிர ஏனைய சகல வினாக்களுக்கும் 50%இற்கும் மேற்பட்ட பிரிவினர் சரியாக விடையளித்துள்ளனர். வினா இலக்கம் 30 இற்கு வழங்கப்பட்ட கூற்றிற்கேற்ப வருடாந்த அங்கத்துவக் கட்டணத் தொகை தொடர்பில் கவனம் செலுத்தாமை காரணமாக சரியான விடையினை அண்மிக்க முடியாதிருந்தது. பரீட்சார்த்திகளுக்கு வருட அங்கத்துவக் கட்டணத் தொகை, நிலுவை அங்கத்துவக் கட்டணத் தொகை என்பவை தொடர்பில் சரியான விளக்கமின்மையே இதற்குக் காரணமாகும். அத்துடன் வினாவினை கவனமாக வாசித்து விடையளித்தல் தொடர்பில் மாணவர்கள் பயிற்சி பெற்றிருக்கவில்லை என்பது இங்கு தெளிவாகின்றது.

மேற்குறித்த கணக்கீட்டு வணிகக் கல்வித் துறைகளில் முன்வைக்கப்பட்டுள்ள வினாக்களில் நடைமுறையிலுள்ள சட்டரீதியான விடயங்களை மதிப்பீடு செய்யும் வினாக்களில் குறைந்த அடைவு மட்டத்தை மாணவர்கள் காட்டியுள்ளமையால் ஆசிரியர்கள் அவ்வாறான சட்டரீதியான விடயங்களை செயற்பாட்டு முறையில் முன்வைத்தல் மிக முக்கியமாகும்.

## 2.2 வினாப்பத்திரம் II இற்கு விடையளிக்கப்பட்டமை தொடர்பான விபரங்கள்

### 2.2.1 வினாப்பத்திரம் II இன் கட்டமைப்பு

**நேரம் :- 2 மணித்தியாலம்** (வினாப்பத்திரத்திற்குரிய மூன்று மணித்தியாலங்களில் இரண்டு மணித்தியாலத்தை (02) இதற்காக பயன்படுத்துதல் வேண்டும்.)

வினாப்பத்திரம் II இன் ஆம் வினா கட்டாயமானது. பகுதி I, II இலிருந்து இரு வினாக்கள் வீதம் தெரிவு செய்து நான்கு வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

1ம் வினாவானது வணிகக் கல்விப் பாடத்தில் 05 வினாக்களையும் கணக்கீட்டுப் பாடத்தில் 05 வினாக்களையும் கொண்ட சுருக்க விடையளிக்கும் 10 வினாக்களை உள்ளடக்கியது. ஒரு வினாவுக்கு 02 புள்ளிகள் வீதம் வழங்கப்படும் மொத்தப் புள்ளிகள் 20 ஆகும்.

ஏனைய கட்டமைப்பு வினாக்கள் 06 இல், பகுதி I வணிகக் கல்விப் பகுதியின் 3 வினாக்களையும் பகுதி II கணக்கீட்டு வினாக்கள் 03 ஐயும் உள்ளடக்கியது. பகுதி I இலும் II இலுமிருந்து இரண்டு வினாக்கள் வீதம் தெரிவு செய்து 04 வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும். ஒரு வினாவிற்கு 10 புள்ளிகள் வீதம் 40 புள்ளிகள் ஆகும்.
வினாப்பத்திரம் II இற்குரிய இறுதிப் புள்ளிகளின் $= 20 + 40$
$= 60$ புள்ளிகளின்

## 2.2.2. வினாப்பத்திரம் II எதிர்பார்க்கப்பட்ட விடைகள், புள்ளி வழங்கும் திட்டம், விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும்

பகுதி II இற்கு விடையளித்தல் தொடர்பான வரைபு இலக்கம் 2, 3, 4.,5 என்பவற்றின் அடிப்படையில் இது தயாரிக்கப்பட்டுள்ளது. உரிய வரைபுப் பகுதிகளும் ஒவ்வொரு வினாவிற்கும் உரிய அவதானிப்புக்கள் முடிவுகளுடன் இங்கு காட்டப்பட்டுள்ளது.

**வினா இல. 1**

**1. சுருக்கமான விடை எழுதுக.**

1. ● பின்வரும் பந்தியைப் பயன்படுத்தி (i) தொடக்கம் (v) வரையுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

மனிதத் **தேவைகளையும் விருப்பங்களையும்** திருப்தி செய்வதற்குப் **பொருட்களையும், சேவைகளையும்** உற்பத்தி செய்வதற்காக உருவாக்கப்படும் நிறுவனங்கள் வணிகங்கள் ஆகும். இச்சகல வணிகங்களும் **தனியாரினால்** அல்லது **அரசாங்கத்தினால்** கொண்டு நடத்தப்படுவதுடன் இவை சில வகையான வணிக நடவடிக்கைகளுடன் தொடர்புடையவையாகக் காணப்படுகின்றன. இவ்வணிகங்கள் பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்வதற்காக **உற்பத்திக் காரணிகள் எனக் கருதப்படும் வளங்களைப்** பயன்படுத்துகின்றன. அவ்வாறே சகல வணிகங்களையும் **முதனிலை, இரண்டாம் நிலை, மூன்றாம் நிலை** என வகைப்படுத்த முடியும்.

(i) ஒவ்வோர் தேவைக்கும் உரிய ஒரு விருப்பத்தைத் தனித்தனியாகக் குறிப்பிடக்கூடியதாக உமக்குத் தேவைப்படும் **நான்கு** பொருட்களை எடுத்துக் காட்டும் ஒரு பட்டியலைத் தயாரிக்குக.

(ii) பொருட்களுக்கும் சேவைகளுக்கும் இடையே எவ்வாறான வித்தியாசங்களைக் காண முடியும் ?

(iii) தனியார் துறை, பொதுத் துறை வணிக நிறுவனங்களுக்குத் தனித்தனியாக **இரண்டு** உதாரணங்களைக் குறிப்பிடுக.

(iv) வணிக நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்படும் உற்பத்திக் காரணிகள் **நான்கைக்** குறிப்பிடுக.

(v) முதனிலை வணிகத்தையும், மூன்றாம் நிலை வணிகத்தையும் தனித்தனியாக விளக்குக.

● பின்வரும் தகவலைப் பயன்படுத்தி (vi) தொடக்கம் (x) வரையுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

பிரோசானந் என்பவர் 2012.01.01. இல் பழங்களை வாங்கி விற்கும் வணிகம் ஒன்றைத் தொடங்கினார். அவரது வணிகத்தின் 2012 ஜனவரி மாதத்திற்கான காசேடு பின்வருமாறு.

**காசேடு**

| திகதி | ப.சீட்டு இல. | விபரம் | பே.ப | தொகை | திகதி | கொ.உ. சீ. இல | விபரம் | பே.ப | தொகை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2012.01.01 | 001 | மூலதனம் | 01 | 250 000 | 2012.01.02 | 001 | பழங்கள் கொள்வனவு | 02 | 40 000 |
| 2012.01.10 | 002 | விற்பனைகள் | 03 | 50 000 | 2012.01.05 | 002 | மோட்டார் வாகனம் | 04 | 170 000 |
| 2012.01.15 | 003 | வங்கிக்கடன் | 05 | 30 000 | 2012.01.07 | 003 | குளிரூட்டி | 06 | 50 000 |
| | | | | | 2012.01.28 | 004 | கூலிகள் | 07 | 5000 |
| | | | | | 2012.01.29 | 005 | வாடகை | 08 | 2500 |
| | | | | | 2012.01.31 | | மீதி கீ.கொ.செ | | 62 500 |
| | | | | 330 000 | | | | | 330 000 |
| 2012.02.01 | | மீதி கீ.கொ.வ. | | 62 500 | | | | | |

ஜனவரி மாதத்திற்கான பின்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன.

- 2012.01.03 இல் ரூபா 5000 பெறுமதியான பழங்கள் தேவனிடமிருந்து கடனுக்குக் கொள்வனவு செய்யப்பட்டது.
- 2012.01.19 இல் மோகனுக்குச் செய்த கடன் விற்பனைகள் ரூபா 22 000 ஆகும்.
- ஜனவரி மாதத்திற்காகச் சென்மதியாகவுள்ள வங்கிக்கடன் வட்டி ரூபா 300 ஆகும்.

காசேட்டில் மேலதிக மீதியாகக் காணப்படும் ரூபா 62 500 ஐ ஜனவரி மாதத்திற்காகத் தான் உழைத்த தேறிய இலாபமாகப் பிரோசானந் கருதுகின்றார்.

(vi) 2012.01.01 இல் பிரோசானந் வணிகத்தின் கணக்கீட்டுச் சமன்பாட்டைத் தொகைகளுடன் தருக.

(vii) இவ்வணிகத்தின் கொடுக்கல்வாங்கல்களைப் பதிவதற்குப் பயன்படுத்த வேண்டிய முதன்மை ஏடுகள் **நான்கைக்** குறிப்பிடுக.

(viii) இவ்வணிகத்தின் பொதுப் பேரேட்டில் காணப்படக்கூடிய சொத்துக்கள் பொறுப்புக்கள், வருமானங்கள் செலவீனங்கள் கணக்குகள் ஒவ்வொன்றுக்கும் உதாரணம் தருக.

(ix) இவ்வணிகத்தின் 2012.01.31 இல் முடிவடைந்த மாதத்திற்கான தேறிய இலாபத்தைக் கணிப்பிடுக.

(x) இவ்வணிகத்தின் ஜனவரி மாதத்திற்கான தேறிய இலாபமாக ரூபா 62 500 உழைக்கப்பட்டது எனப் பிரோசானந் குறிப்பிட்டது பற்றி நீர் என்ன கூறுகின்றீர்.

(02 × 10 = 20 புள்ளிகள்)

**எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்**

1. (i)

| தேவைகள் (Needs) | விருப்பங்கள் (Wants) |
|---|---|
| உணவு Food | சோறு, பாண், இடியப்பம், தோசை |
| உடை Clothing | காற்சட்டை, சப்பாத்து, சட்டை, சேலை |
| உறையுள் Shelter | வீடு, தொடர்மாடி, மாளிகை |
| கல்வி Education | புத்தகங்கள், பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் |
| சுகாதாரம் Health | மருந்து, மருத்துவர், வைத்தியசாலை |
| பாதுகாப்பு Security | பாதுகாப்புச் சேவை, காப்புறுதி, தொழிற் பாதுகாப்பு |

தேவையும் தொடர்புடைய விருப்பமும் சரியாகக் குறிப்பிட்டிருப்பின் (½ × 4 = 01 புள்ளிகள்)
தேவைகள் மட்டும் குறிப்பிட்டிருப்பின் புள்ளி இல்லை.

(ii)

| | **பொருட்கள் Goods** | **சேவைகள் Services** |
|---|---|---|
| (i) | தொட்டுணர முடியும் | தொட்டுணர முடியாது Intangibility |
| (ii) | உற்பத்தியாளரிடம் இருந்து பிரிக்க முடியும் | வழங்குபவரிடம் இருந்து பிரிக்க முடியாது Inseparability |
| (iii) | பெரும்பாலும் ஒத்த தன்மையை கொண்டிருக்கும் Almost Uniformity | வேறுபடும்தன்மையை கொண்டது. Variability |
| (iv) | களஞ்சியப்படுத்த முடியும் | களஞ்சியப்படுத்த முடியாது. Perishability |

(1 × 2 = 01 புள்ளி)

(iii) **தனியார் துறை வணிக நிறுவனங்களுக்கு உதாரணங்கள்**

- ✶ தனி வியாபாரம் (Sole Trader)
- ✶ பங்குடமை (Partnership)
- ✶ வரையறுத்த கம்பனிகள் (Limited Companies)
- ✶ கூட்டுறவுச் சங்கங்கள் (Co-operative Societies)
- ✶ கழகங்கள் (Clubs & Societies) (½ × 2 = 01 புள்ளிகள்)

**பொதுத் துறை வணிக நிறுவனங்களுக்கு உதாரணங்கள்**

- ✶ அரச திணைக்களங்கள் அஞ்சல் திணைக்களம் இலங்கை புகையிரதத் திணைக்களம்
- ✶ பொதுக்கூட்டுத்தாபனங்கள்
- ✶ அரச கம்பனிகள்
- ✶ உள்ளூராட்சி மன்றங்கள்
- ✶ மாகாண சபையின் கீழ் இயங்கும் வணிகங்கள் (½ × 2 = 01 புள்ளிகள்)

வணிக நிறுவனங்களின் பெயர்களை பொருத்தமான முறையில் எழுதியிருப்பினும் புள்ளி வழங்குக.
உதாரணம் : கண்ணன் ஸ்ரோர்ஸ்
இலங்கை மின்சார சபை

(iv) **உற்பத்திக் காரணிகள் (Factors of Production)**

- ✶ நிலம் (Land)
- ✶ உழைப்பு (Labour)
- ✶ மூலதனம் (Capital)
- ✶ முயற்சியாண்மை (Entrepreneurship) OR

- ✶ நிலம் Land / மூலப்பொருட்கள் Materials / இயங்கை வளங்கள் Natural resources
- ✶ உழைப்பு Labour / தொழிலாளர்கள் Workers
- ✶ மூலதனம் Capital / பணம் Money / இயந்திரம் Machinery / கட்டடம் Buildings etc.
- ✶ முயற்சியாண்மை Entrepreneurship / நிறுவனம் Prganication / உரிமையாளர் Owner

(½ ×4 = 02 புள்ளி)

வளங்களுக்கு நான்கு உதாரணங்களை குறிப்பிட்டிருப்பினும் புள்ளி வழங்குக.

(v) முதலாந்தர வணிகம் (Primary business)
இயற்கை வளங்களில் இருந்து பிரித்தெடுத்து அதேவடிவில் பயன்படுத்தும் செயற்பாடு (01 புள்ளி)

மூன்றாந்தர வணிகம் (Teriary business)
சேவைகளை வழங்குதல் தொடர்பான நடவடிக்கைகள் மூன்றாந்தர வணிகமாகும்.
வியாபாரமும் துணைச் சேவைகளும் இதனுள் உள்ளடங்கும். (01 புள்ளி)

உதாரணங்கள் மட்டும் எழுதியிருப்பின் புள்ளிகள் இல்லை.

(vi)

| சொத்துக்கள் | = | மூலதனம் / உரிமை | + | பொறுப்புக்கள் |
|---|---|---|---|---|
| 250 000 | = | 250 000 | + | 0 |

அல்லது

| சொத்துக்கள் | = | மூலதனம் / உரிமை |
|---|---|---|
| 250 000 | = | 250 000 |

(02 புள்ளிகள்)

(vii) **முதன்மை ஏடுகள் (Prime Entry Books)**
- ✶ காசேடு (Cash Book)
- ✶ கொள்வனவு நாளேடு (Purchase Journal)
- ✶ விற்பனை நாளேடு (Sales Journal)
- ✶ நாட்குறிப்பேடு (The Journal) / பொது நாட்குறிப்பேடு (General Journal) (½ ×4 = 02 புள்ளி)

(viii) **சொத்துக் கணக்குகள்**
- ✶ மோட்டார் வாகனக் கணக்கு
- ✶ குளிர்சாதனப் பெட்டிக் கணக்கு
- ✶ காசேடு
- ✶ கடன்பட்டோர் கணக்கு / மோகன் கணக்கு

**பொறுப்புக்கள் கணக்கு**
- ✶ வங்கிக் கடன் கணக்கு
- ✶ அட்டுறு வங்கி வட்டிக் கணக்கு
- ✶ கடன்கொடுத்தோர் கணக்கு / தேவன் கணக்கு

**வருமானக் கணக்குகள்**
- ✶ விற்பனைக் கணக்கு

**செலவினக் கணக்குகள்**
- ✶ கொள்வனவுக் கணக்குகள்
- ✶ கூலிக் கணக்கு
- ✶ வாடகைக் கணக்கு
- ✶ கடன் வட்டிக் கணக்கு (½ ×4 = 02 புள்ளி)

(ix)

| | | | |
|---|---|---|---|
| விற்பனைகள் (50 000 + 22 000) | | 72 000 | (½) |
| கழி : கொள்வனவுகள் (40 000 + 5 000) | | (45 000) | (½) |
| மொத்த இலாபம் | | 27 000 | |
| கூலிகள் | 5 000 | | |
| வாடகை | 2 500 | | |
| கடன் வட்டி | 300 | 7 800 | (½) |
| தேறிய இலாபம் | | 19 200 | (½) |

இறுதி விடை மட்டும் குறிப்பிட்டிருப்பின் (½) புள்ளி வழங்குக.

சரியான தொகைக்கு (01 புள்ளிகள்)

சரியான பதிவுக்கு (01 புள்ளிகள்)

(x) காசேட்டு மீதியானது தேறிய இலாபம் அல்ல

அல்லது

பிரோசானந்தின் கூற்று தவறானது.

| 01 | (i) | (ii) | (iii) | (iv) | (v) | (vi) | (vii) | (viii) | (ix) | (x) | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 02 | 02 | 02 | 02 | 02 | 02 | 02 | 02 | 02 | 02 | = | 20/20 |

**1ஆம் வினாவிற்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும்**

வினாவிற்குப் புள்ளிகள் பெற்ற விதம்




இவ்வினாவிற்கு வழங்கப்பட்ட மொத்தப் புள்ளிகள் 20 ஆகும்.
0 - 5 புள்ளி வகுப்பாயிடை 15%
6 - 10 புள்ளி வகுப்பாயிடை 27%
11 - 15 புள்ளி வகுப்பாயிடை 38%
16 - 20 புள்ளி வகுப்பாயிடை 20%
எனப் புள்ளிகள் பெற்றுள்ளனர்.

இவ்வினாவிற்கு 16 புள்ளிகளை விடவும் கூடுதலான புள்ளிகளைப் பெற்றவர்கள் 20% ஆக இருப்பதுடன் 42% இனர் 10 புள்ளிகள் அல்லது அதற்கும் குறைந்த புள்ளிகளையே பெற்றுள்ளனர்.

வினாவின் பிரிவுகளுக்கும் உபபிரிவுகளுக்குமான இலகுதன்மை




1 ஆம் வினாவின் பிரிவுகளும் உபபிரிவுகளும்

இவ்வினாவில் 10 உபபகுதிகள் காணப்படுவதுடன் (i), ஆவது உப பகுதியின் இலகுதன்மை 91% ஐ அண்மித்ததாக இருப்பதுடன், (ix) பகுதியின் இலகுதன்மை 13% ஐ விடக் குறைவாகவும் காணப்படுகின்றது.

1 வினாவில் வணிகக் கல்வி, கணக்கீடு போன்ற பாடத்துறைகள் இரண்டிலும் வினாக்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இக்கட்டாய வினாவிற்கு சகல விண்ணப்பதாரிகளும் விடையளித்திருந்தனர். முதலாம் வினாவின் உபபகுதி (i) இற்கு 91% மானவர்கள் சரியாக விடையளித்திருந்தமையானது தேவைகள் விருப்பங்கள் தொடர்பில் உயர் அடைவு மட்டத்தை மாணவர்கள் பெற்றுள்மையைக் காட்டுகின்றது. (iv), (ix) பகுதிகள் தவிர்ந்த ஏனைய சகல வினாக்களுக்கும் 40% த்திற்கும் மேற்பட்டோர் சரியாக விடையளித்திருந்தனர். (iv) பகுதியின் உற்பத்திச் செயற்பாடுகளுக்குரிய உற்பத்திக் காரணிகளை சரியாக இனம் காணாமை காரணமாக சரியாக விடையளிக்கத் தவறியிருந்தனர். முதலாம் வினாவின் உபபகுதி ix இற்கு சரியான விடையளித்தோர் 13% மான பரீட்சார்த்திகள் மாத்திரமேயாகும். காசேட்டிற்கு மேலதிகமாக வழங்கப்பட்டுள்ள ஏனைய தகவல்கள் தொடர்பில் கவனம் செலுத்தாமையே இதற்குக் காரணமாகும். வகுப்பறைச் செயற்பாடுகளினூடாக இந்தத் தேர்ச்சியினை விருத்தி செய்து கொள்ள முடியும்.

**வினா இல. 2**

**பகுதி I - வணிகக் கல்வி**

(**இரண்டு** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.)

2. (i) *வரையறுத்த கம்பனி ஒன்றைப் பதிவு செய்வதற்காக விண்ணப்பப்படிவத்துடன் கம்பனிப் பதிவாளருக்குச் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்களைக் குறிப்பிடுக.* (2 புள்ளிகள்)

(ii) நர்மதன் என்பவர் வாடிக்கையாளரது கட்டளைக்கு இணங்க விசேட வகையான அலுமாரியைத் தயாரிக்கின்றார். அவரது வேலைத்தளத்தில் மரவேலை செய்யும் ஒருவரும் காவலாளி ஒருவரும் ஊழியராகக் கடமையாற்றுகின்றனர். 2013 ஜனவரி மாதத்தில் அலுமாரிகளைத் தயாரிப்பதற்காகச் செலவு செய்யப்படுமென மதிப்பிடப்பட்ட செலவுகள் பின்வருமாறு.

- மரம் (ஒரு அலுமாரிக்கு) ரூபா 10,000
- மரவேலை செய்பவரது கூலி (ஒரு அலுமாரிக்கு) ரூபா 6,000
- வாடகை (ஒரு மாதத்திற்கு) ரூபா 5,000
- காவலாளியினது கூலி (ஒரு மாதத்திற்கு) ரூபா10,000
- மணற்கடுதாசி (sandpaper), ஆணிகள், தீந்தைகள் (colours) போன்ற மறைமுகச் செலவுகள் (ஒரு மாதத்திற்கு) ரூபா 5000

2013 ஜனவரி மாதத்திற்காக 4 (நான்கு) அலுமாரிகளைத் தயாரிப்பதற்கு வாடிக்கையாளரிடமிருந்து கட்டளைகள் பெறப்பட்டிருந்தன.

(அ) மேற்கூறியதில் இருந்து அலுமாரியைத் தயாரிப்பதில் உள்ளடங்கியுள்ள நேர் செலவுகள், மறைமுக செலவுகள் ஒவ்வொன்றுக்கும் **இரண்டு** உதாரணங்கள் தருக. (2 புள்ளிகள்)

(ஆ) ஒரு அலுமாரிக்கான மதிப்பிடப்பட்ட மூலக் கிரயத்தைக் கணிப்பிடுக. (2 புள்ளிகள்)

(இ) வேலைத்தளத்தின் 2013 ஜனவரி மாதத்திற்கான மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயத்தைக் கணிப்பிடுக. (2 புள்ளிகள்)

(ஈ) ஒரு அலுமாரிக்கான மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயத்தைக் கணிப்பிடுக. (2 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

**எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்**

2. (i) **பதிவு செய்வதற்கு அவசியமான ஆவணங்கள்**
   - ✶ கம்பனியின் பெயர் பற்றிய கூற்று
   - ✶ அகவிதிகள் (Articles Association)
   - ✶ இயக்குனரின் சம்மதக் கடிதம்
   - ✶ செயலாளரின் சம்மதக் கடிதம் (½ × 4 = 02 புள்ளிகள்)

(ii) (அ) **நேர்ச் செலவுகள்**
   - ✶ மரம் (Wood)
   - ✶ தச்சனின் (மரவேலை செய்பவரின்) கூலி (Carpenter's Wages) (½ × 2 = 01 புள்ளிகள்)

**நேரில் செலவுகள்**
   - ✶ வாடகை
   - ✶ காவலாளியின் கூலி
   - ✶ மனற்கடதாசி, ஆணிகள், வர்ணங்கள் / நேரில் செலவுகள் (½ × 2 = 01 புள்ளிகள்)

| | | | |
|---|---|---|---|
| (ஆ) மரம் | = | 10 000 | (1/2) |
| தச்சனின் கூலி | = | 6 000 | (1/2) |
| | = | 16 000 | (1 புள்ளி) |

(2 புள்ளிகள்)

(இ) மொத்தக் கிரயக் கணிப்பீடு :

| | | | |
|---|---|---|---|
| மரம் (10 000 × 4) | = | 40 000 | |
| தச்சனின் கூலி (6 000 × 4) | = | 24 000 | ½ |
| | = | 64 000 | |
| வாடகை | = | 5 000 | |
| மேற்பார்வையாளரின் கூலி | = | 10 000 | ½ |
| நேரில் கூலிகள் | = | 5 000 | |
| | | 84 000 | 01 |

(2 புள்ளிகள்)

(ஈ) அலகொன்றுக்கான கிரயம் $= \dfrac{\text{மொத்த உற்பத்திக் கிரயம்}}{\text{அலகுகளின் எண்ணிக்கை}}$

$= \dfrac{84\ 000}{4}$

$= 21\ 000$

(2 புள்ளிகள்)

(மொத்தப் புள்ளிகள் 10)

| 02. | (i) | (ii) (அ) | (ii) (ஆ) | (ii) (இ) | (ii) (ஈ) | | |
|---|---|---|---|---|---|---|---|
| | 02 | 02 | 02 | 02 | 02 | = | $\frac{10}{10}$ |

**2வது வினாவிற்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும்**

வினாவிற்குப் புள்ளிகள் பெற்ற விதம்




இவ்வினாவிற்கு வழங்கப்பட்ட மொத்தப் புள்ளிகள் 10 ஆகும்.

0 - 2 புள்ளி வகுப்பாயிடை 18%
3 - 5 புள்ளி வகுப்பாயிடை 34%
6 - 7 புள்ளி வகுப்பாயிடை 25%
8 - 10 புள்ளி வகுப்பாயிடை 23%
எனப் புள்ளிகள் பெற்றுள்ளனர்.

இவ்வினாவிற்கு 08 புள்ளிகள் அல்லது அதனை விடவும் கூடுதலான புள்ளிகளைப் பெற்றவர்கள் 23% ஆக இருப்பதுடன் 18% இனர் 02 புள்ளிகள் அல்லது அதற்கும் குறைந்த புள்ளிகளையே பெற்றுள்ளனர்.

வினாவின் பிரிவுகளுக்கும் உபபிரிவுகளுக்குமான இலகுதன்மை




2 ஆம் வினாவின் பிரிவுகளும் உபபிரிவுகளும்

இவ்வினாவில் பகுதிகள் உப பகுதிகள் 5 காணப்படுவதுடன் உபபகுதிகள் (ii), (அ) வின் இலகுதன்மை 89% ஐ விடவும் கூடுதலாக இருப்பதுடன், (i) பகுதியின் இலகுதன்மை 40% ஐ விடக் குறைவாகவும் காணப்படுகின்றது.

இவ்வினாவின் பகுதி (i) "வணிகத்தை ஆரம்பித்தல்" என்ற தேர்ச்சிமட்டத்தினூடாக தயாரிக்கப்பட்டுள்ளது. எனினும் இதற்கு 40% மாணோர் மாத்திரமே சரியாக விடையளித்திருந்தனர். தரம் 10 பாடப்புத்தகத்தில் இப்பகுதிக்கு நேரடியாக விடை வழங்கப்பட்டுள்ளது.

பாடப்புத்தகத்தை கற்பதில் மாணவர்களை ஈடுபடுத்துவதன் முக்கியத்துவம் இதனூடாக இங்கு சுட்டிக்காட்டப்படுகின்றது. விடய ஆய்விற்குரிய தொடரிலக்கம் (ii) (அ), (ஆ) என்பவற்றிற்கு சரியான விடையளிக்கப்பட்டமைக்கு காரணம் குறிப்பிட்ட விடயத்திற்குரிய நேர், நேரில் செலவுகளை தெளிவாக இனம் கண்டிருந்தமையேயாகும். (ii) இல் உபபகுதிகள் (இ), (ஈ) என்பவற்றினை ஏனைய உபபகுதிகளுடன் ஒப்பிடும் போது வழங்கப்பட்ட சரியான விடையின் அளவு குறைந்திருந்தமையைக் காண முடிகின்றது. முதற் கிரயத்தினைக் கணிக்கும் போது மொத்த உற்பத்தித் தொடர்பில் கவனம் செலுத்தச் செய்வதுடன் அதனூடாக உற்பத்திக் கிரய வகைகளை இனம் காண்பதற்கும் கணிப்பிடுவதற்கும் மாணவர்களுக்கு பயிற்சிகளை வழங்குதல் வேண்டும்.

**வினா இல. 3**

3. (i) *வணிக வங்கி ஒன்றில் நடைமுறைக் கணக்கைப் பேணுவதன் மூலம் வணிகர் ஒருவர் பெற்றுக் கொள்ளக்கூடிய **நான்கு** அனுகூலங்களைக் குறிப்பிடுக.* *(2 புள்ளிகள்)*

(ii) *பின்வரும் கூற்றுக்கள் 'சரியானவையா' 'பிழையானவையா' எனக் கூறுக.*

(அ) *வரவு அட்டை (debit card) ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்கு வங்கிக் கணக்கு ஒன்றைப் பேண வேண்டிய தேவை இல்லை.*

(ஆ) *இழப்பீடு (Indemnity) என்பது ஒரு காப்புறுதித் தத்துவமாகும்.*

(இ) *ஏற்பட்ட வருமானங்களும் செலவுகளும் வணிகத் திட்டம் ஒன்றில் உள்ளடக்கப்படுதல் வேண்டும்.*

(ஈ) *விசேட (சிறப்பு) குறுக்குக் கோடிடலின் போது காசோலை ஒன்றின் முன்பக்கத்தில் ஒரு வங்கியின் பெயர் எழுதப்படல் வேண்டும்.* *(2 புள்ளிகள்)*

(iii) *இன்று கடனட்டைகள் பெருமளவில் பயன்படுத்தப்படுகின்றன. கடனட்டைகளைப் பயன்படுத்துவதன் மூலம் வாடிக்கையாளர் ஒருவரால் பெற்றுக்கொள்ளக் கூடிய **நான்கு** அனுகூலங்களைக் குறிப்பிடுக.* *(2 புள்ளிகள்)*

(iv) ***வாய்மொழி, எழுத்து, இலத்திரனியல், குறியீடுகள்** போன்ற ஒவ்வொரு ஊடகங்களின் கீழும் பயன்படுத்தப்படும் **ஒவ்வொரு** தொடர்பாடல் முறையைக் குறிப்பிடுக.* *(2 புள்ளிகள்)*

(v) *முறையான களஞ்சியப்படுத்தல் முறைமை ஒன்று காணப்படாத போது வணிகர் ஒருவர் எதிர்கொள்ளக்கூடிய பிரச்சினைகள் **நான்கைக்** குறிப்பிடுக.* *(2 புள்ளிகள்)*

*(மொத்தம் 10 புள்ளிகள்)*

---

**எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்**

3. (i)
- ★ காசோலை மூலம் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ள முடியும்
- ★ வங்கி மேலதிகப் பற்று வசதியினைப் பெற முடியும்
- ★ வருமானங்களை நேரடியாக அறவீடு செய்ய முடியும் (பங்குலாபம்)
- ★ நிலையான கட்டளைக் கொடுப்பனவுகளை மேற்கொள்ள முடியும். (½ × 4 = 02 புள்ளிகள்)

(ii) (ஆ) - பிழை (½)

(ஆ) - சரி (½)

(இ) - பிழை (½)

(ஈ) - சரி (½) (½ × 4 = 02 புள்ளிகள்)

(iii)
- ★ கடனுக்குப் பொருட்கள் சேவைகளை வாங்க முடியும்.
- ★ ATM இயந்திரம் ஊடாக காசு முற்பணத்தினை பெற முடியும்
- ★ வட்டியின்றி குறிப்பிட்ட கடன் காலத்திற்குள் கொடுப்பனவினை மேற்கொள்ள முடியும்.
- ★ சட்டரீதியான பணக் கொடுக்கல் வாங்கலை விட இதன் மூலம் கொடுக்கல் வாங்கல் இலகுபடுத்தப்படும்.
- ★ சர்வதேச கொடுப்பனவுகளுக்கு பயன்படுத்தலாம்.
- ★ பாதுகாப்பும் வசதியும்

★ விசேட கழிவுகளும் உபகாரப் புள்ளிகளும் (½ × 4 = 02 புள்ளிகள்)

(iv)

| | |
|---|---|
| வாய்மொழி | கூட்டங்கள், கலந்துரையாடல், செயலமர்வுகள் |
| எழுத்து மூலம் | கடிதங்கள், அறிவித்தல் பலகை, ஞாபகக் குறிப்பு, சுற்றறிக்கை, அறிவித்தல்கள், அறிக்கைகள் |
| இலத்திரனியல் | தொலைபேசி, தொலைக்காட்சி, வானொலி, ஒலிபெருக்கி, இயந்திரம், வீடியோ நாடா |
| குறியீடுகள் | வீதிக் குறியீடுகள், கட்டளைக் குறியீடுகள், பொதியிடல் குறியீடுகள் |

(உதாரணத்துக்கு ½ × 4 = 02 புள்ளிகள்)

(v)
- ★ வணிக நடவடிக்கைகள் தடைபடும்
- ★ வாடிக்கையாளரின் தேவைகளை தொடர்ச்சியாக பூர்த்திசெய்ய முடியாது
- ★ நிறுவன நன்மதிப்பு பாதிப்படையும்
- ★ தேவையற்ற மேலதிகச் செலவுகள் ஏற்படும்
- ★ தேவைக்கதிகமான இருப்பைப் பேணுவதனால் நட்டம் ஏற்படும். (½ × 4 = 02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

| 03. | (i) | (ii) (அ) | (ii) (ஆ) | (ii) (இ) | (ii) (ஈ) | (iii) | (iv) | (v) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 02 | ½ | ½ | ½ | ½ | 02 | 02 | 02 | = $\frac{10}{10}$ |

**3 ஆவது வினாவிற்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும்**

வினாவிற்குப் புள்ளிகள் பெற்ற விதம்




மூன்றாம் வினாவினை ஏறக்குறைய 92% ஆனோர் தெரிவு செய்துள்ளனர். இவ்வினாவிற்கு வழங்கப்பட்ட மொத்தப் புள்ளிகள் 10 ஆகும்.

00 - 02 புள்ளி ஆயிடையில் 6%
03 - 05 புள்ளி ஆயிடையில் 24%
06 - 07 புள்ளி ஆயிடையில் 32%
08 - 10 புள்ளி ஆயிடையில் 38%
என்றவாறு புள்ளிகள் பெற்றுள்ளனர்.

இவ்வினாவிற்கு 8 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்கள் 38% ஆக இருப்பதுடன் 6% ஆனவர்கள் 02 அல்லது அதற்கும் குறைந்த புள்ளிகளையே பெற்றுள்ளனர்.

வினாவின் பிரிவுகளுக்கும் உபபிரிவுகளுக்குமான இலகுதன்மை




3 ஆம் வினாவின் பிரிவுகளும் உபபிரிவுகளும்

இவ்வினாவில் பகுதிகள் உப பகுதிகள் 8 காணப்படுவதுடன் உபபகுதிகள் (ii) (அ), (ஆ), (இ) (ஈ), பகுதிகளின் இலகுதன்மை 20% ஐ விட அண்மித்ததாகக் காணப்படுவதுடன், (iv) உபகுதியின் இலகுதன்மை 88% ஆகும்.

3ஆம் வினாவின் (i) முதலாம் பகுதிக்கு பரீட்சார்த்திகளில் 20% மானோர் சரியாக விடையளித்திருந்தனர். பாட அறிவுடன் நடைமுறைக்கணக்கினூடாக காசோலைப் பாவனை நடைமுறையில் இடம்பெறுகின்ற முறை தொடர்பில் பரீட்சார்த்திகள் அறிவினைப் பெற்றிருந்தமையே இதற்கான காரணமாகும். (ii) அ, ஆ, இ, ஈ போன்ற உபபகுதிகள் அனைத்திற்கும் 20% த்திற்கும் குறைந்த தொகையினர் மாத்திரமே சரியாக விடையளித்திருந்தனர். இதனூடாக தெரிய வருவது வழங்கப்பட்ட கூற்றுக்கள் தெளிவாக முன்வைக்கப்பட்டிருந்தாலும் விடையளிக்கும் போது பரீட்சார்த்திகள் தம்மிடையே உருவாக்கிக் கொண்ட பாடவிடயம் தொடர்பாக உறுதியின்மை காரணமாக சரியாக விடையளிக்கத் தவறியிருந்தனர். இவ்வாறான கூற்றுக்களுடனான பயிற்சிகளில் மாணவர்களை ஈடுபடுத்துவதினூடாக அவர்களின் திறன்களை மேம்படுத்த முடியும்.

கடன்அட்டைப் பாவனை மூலம் வாடிக்கையாளர் ஒருவர் பெற்றுக்கொள்ளக்கூடிய நன்மைகளுக்குப் பதிலாக கூடுதலான பரீட்சார்த்திகள் ATM அட்டையினைப் பயன்படுத்துவதன் மூலம் வாடிக்கையாளருக்கு கிடைக்கப் பெறும் நன்மைகளையே முன்வைத்திருந்தனர். கடன் அட்டை, ATM அட்டை என்பவற்றை சரியாக விளங்கிக் கொள்ளாமையே இதற்குரிய பிரதான காரணமாகும். தரம் 10 பாடப்புத்தகத்தில் "இலத்திரனியல் பணச்சேவை" தேர்ச்சி மட்டத்தினை பார்ப்பதினூடாக இலத்திரனியல் பணம் தொடர்பிலான பரீட்சார்த்திகளின் சரியான மனப்பாங்கினை கட்டியெழுப்ப முடியும். பகுதி (iv) தொடர்பில் பரீட்சார்த்திகள் சிறப்பாக விடையளித்திருந்தனர். தகவல் தொடர்பாடல் தொழினுட்பம் தொடர்பில் பரீட்சார்த்திகளின் அறிவு அனுபவம் இதற்கு வெற்றிகரமாக விடையளிப்பதற்கு காரணமாக அமைந்திருந்தது. முறையான களஞ்சியப்படுத்தல் முறையொன்று காணப்படாதபோது உருவாகின்ற பிரச்சினைகள் தொடர்பிலான அறிவு காரணமாக பகுதி (v) இற்கு கூடுதலான பரீட்சார்த்திகள் சரியாக விடையளித்திருந்தனர்.

பொதுவாக எடுத்துநோக்கும் போது வினாவில் செயற்பாட்டு, சட்டரீதியான விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருப்பதனால் பாட விடயங்களை மாணவர்களுக்கு விளக்கும் போது செயற்பாட்டு நிலைமையினூடாக சட்ட விடயங்களையும் தெளிவுபடுத்துதல் முக்கியமாகும்.

**வினா இலக்கம் 4**

4. (i) *ஜெயன் தேனுஜா ஆகியோர் வணிகமொன்றின் பங்காளர்கள் ஆவர். இவர்கள் தமது வணிகத்திற்கு நிதியை அதிகரித்துக் கொள்வதற்காகச் சகல நிதி மூலங்களையும் பயன்படுத்தினர். மேலும் இவர்கள் தமது வணிகத்தை ஒரு வரையறுத்த தனியார் கம்பனியாகப் பதிவு செய்து கொள்வதன் மூலம் விரிவுபடுத்தத் தீர்மானித்தனர்.*
   - (அ) *தமது பங்குடைமைக்காக ஜெயன், தேனுஜா ஆகியோர் ஏற்கனவே பயன்படுத்திய நிதி மூலமாக நீர் எதனைக் கருதுகின்றீர் ?* *(2 புள்ளிகள்)*
   - (ஆ) *இவ்வணிகத்தை ஒரு வரையறுத்த தனியார் கம்பனியாகப் பதிவு செய்வதன் மூலம் பெற்றுக்கொள்ளக்கூடிய நிதி மூலங்களுக்கான வழிமுறைகள்* ***இரண்டை*** *விளக்குக.* *(2 புள்ளிகள்)*

   (ii) *சேமிப்புக் கணக்கொன்றுடன் ஒப்பிடும் போது நிலையான வைப்புக் கணக்கொன்றில் முதலீடு செய்வதன் மூலம் கிடைக்கும் அனுகூலங்கள்* ***இரண்டை*** *குறிப்பிடுக.* *(2 புள்ளிகள்)*

   (iii) *நிதி மூலங்களுக்கான வழிமுறைகளைத் தெரிவு செய்யும் போது வணிகர் ஒருவரால் கருத்திற் கொள்ளப்பட வேண்டிய* ***நான்கு*** *காரணிகளைக் குறிப்பிடுக.* *(2 புள்ளிகள்)*

   (iv) *சாதாரண பங்குகளில் முதலீடு செய்வதன் அனுகூலங்கள்* ***இரண்டை*** *விளக்குக.* *(2 புள்ளிகள்)*

*(மொத்தம் 10 புள்ளிகள்)*

**எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்**

4. (i) (அ)
- ★ பங்காளரின் மூலதனம்
- ★ பங்காளர் வழங்கும் கடன்
- ★ உறவினர்கள், நண்பர்களிடம் இருந்து கடன் பெறல்.
- ★ வங்கிக் கடன் ஏனைய நிதி நிறுவனங்களிடமிருந்து பெறும் கடன்
- ★ வியாபாரக் கடன்
- ★ வங்கி மேலதிகப் பற்று

($\frac{1}{2} \times 4 = 02$ புள்ளிகள்)

(ஆ)
- ★ பங்குகளை வழங்குதல் (சாதாரண பங்கு ∴ முன்னுரிமைப் பங்கு)
- ★ வணிகப் பத்திரங்கள்
- ★ நீண்ட கால வங்கிக் கடன்

(குறிப்பிடுவதற்கு ½ புள்ளியும், தெளிவுபடுத்துவதற்கு ½ புள்ளியும்.)

($\frac{1}{2} \times 4 = 01$ புள்ளிகள்)

(ii) **நிலையான வைப்பின் அனுகூலங்கள்**

- ★ சேமிப்பு வைப்பிலும் பார்க்க கூடிய வீத வட்டியினைப் பெற முடியும்.
- ★ நிலையான வைப்புச் சான்றிதழுக்கெதிராக கடன்களைப் பெற முடியும்.
- ★ வட்டியினை மாதாந்தம் அல்லது முதிர்வின் போது பெற முடியும்.

($\frac{1}{2} \times 4 = 02$ புள்ளிகள்)

(iii)
- ★ நிதித் தேவைப்பாட்டின் நன்மை
- ★ பிணைகளின் தேவைப்பாடு
- ★ நிதி பெறுவதற்கான விதிகளும் நிபந்தனைகளும்
- ★ வசதியைப் பெற்றுக்கொள்வதில் உள்ள நெகிழ்வுத்தன்மை
- ★ திருப்பிச் செலுத்தக் கூடிய ஆற்றல்
- ★ நிதியைத் திரட்டுவதற்கு ஏற்படும் கிரயம் (செலவு)
- ★ வணிக ஒழுங்கமைப்பின் தன்மை
- ★ மீளச் செலுத்த வேண்டிய காலம்

நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படும் வணிக நடவடிக்கையின் தன்மையும் வகையும்

($1 \times 2 = 02$ புள்ளிகள்)

(iv)
- ★ பங்குலாபத்தைப் பெற முடியும்
- ★ மூலதன இலாபத்தைப் பெற முடியும்
- ★ உரித்து வழங்கலைப் பெற முடியும்
- ★ வாக்களிக்கும் உரிமையைப் பெற முடியும். நிர்வாகத்தில் பங்குபற்றும் உரிமை
- ★ பிணையாக வைத்து பணம் பெறுதல்

(குறிப்பிடுவதற்கு ½ புள்ளியும், தெளிவுபடுத்துவதற்கு ½ புள்ளியும்.)

($1 \times 2 = 02$ புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

| 04. | (i) (அ) | (i) (ஆ) | (ii) | (iii) | (iv) | |
|---|---|---|---|---|---|---|
| | 02 | 02 | 02 | 02 | 02 | $= \frac{10}{10}$ |

**4வது வினாவிற்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும் முடிபுகளும்**

வினாவிற்குப் புள்ளிகள் பெற்ற விதம்




4 ஆம் வினாவினை 47% ஆன பரீட்சார்த்திகள் தெரிவு செய்துள்ளனர். இவ்வினாவிற்கு வழங்கப்பட்ட மொத்தப் புள்ளிகள் 10 ஆகும்.
00 - 02 புள்ளி ஆயிடையில் 38%
03 - 05 புள்ளி ஆயிடையில் 32%
06 - 07 புள்ளி ஆயிடையில் 17%
08 - 10 புள்ளி ஆயிடையில் 13%
எனப் புள்ளி பெற்றுள்ளனர்.

இவ்வினாவிற்கு 8 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்கள் 13% ஆக இருப்பதுடன் 70% ஆனவர்கள் 05 அல்லது அதற்கும் குறைவான புள்ளிகளையே பெற்றுள்ளனர்.

வினாவின் பிரிவுகளுக்கும் உபபிரிவுகளுக்குமான இலகுதன்மை




4 ஆம் வினாவின் பிரிவுகளும் உபபிரிவுகளும்

இவ்வினாவில் பகுதிகள் உப பகுதிகள் 5 காணப்படுவதுடன் (ii), (iii) உபபகுதிகளின் இலகுதன்மை 50% ஐ விடவும் அதிகமாகக் காணப்படுவதுடன், ஏனைய பகுதிகளினதும் இலகுதன்மை 50% த்தை விடவும் குறைவானதாகும்.

04 வது வினாவினை பரீட்சைக்கு தோற்றியவர்களில் 47% மானோர் மாத்திரமே தெரிவு செய்திருந்தனர். இது பாடத்திட்டத்தில் இறுதித் தேர்ச்சி மட்டமாகிய நிதியீட்டல் வழிமுறைகளும் “முதலீட்டு வழிமுறைகளும்” என்ற பாடத்தினூடாக கட்டியெழுப்பப்பட்ட வினாவொன்றாகும். விடையளித்தலின் போது வினாவிற்குரிய 10 புள்ளிகளில் 6 அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளை 30% மானோர் மாத்திரமே பெற்றிருந்தனர். பரீட்சார்த்திகள் நிதியீட்டலின் போதும் முதலீட்டின் போதும் கவனத்திற்கொள்ள வேண்டிய விடயங்கள் தொடர்பில் உரிய விளக்கமில்லாமல் செயற்பட்டமையே பிழையாக விடையளிப்பதற்குரிய காரணமாகவும் இருக்கலாம். எனவே இத்தேர்ச்சி மட்டத்தை சிறப்பாக கற்பிப்பதற்கு முன்னரே திட்டமிடல் வேண்டும். அதற்கு மேலதிகமாக, மாணவர்களை பத்திரிகைகள், சஞ்சிகைகள் வாசிப்பதற்கு தூண்டுதல், வங்கி, நிதி நிறுவனங்களினால் வெளியிடப்படும் துண்டுப்பிரசுரங்களை வாசிக்கத் தூண்டுதல் போன்ற செயற்பாட்டு ரீதியிலான விடயங்களில் ஈடுபடச் செய்வது முக்கியமாகும்.

வினா இல. 5

## பகுதி II - கணக்கீடு

(**இரண்டு** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.)

5. 2012 நவம்பர் மாதத்திற்காக **மங்களா புடவை** வியாபாரிகளின் கணக்கீட்டு எழுதுவினைஞரினால் சமர்ப்பிக்கப்பட்ட மூலஆவணங்கள் வருமாறு.

பட்டியல் **நித்யா புடவை வியாபாரிகள்**
இல. **501** **இல. 10, பிரதான வீதி,**
**மட்டக்களப்பு** 2012.11.08

முகாமையாளர்,
மங்களா புடவை வியாபாரிகள்,
திருகோணமலை

| தொடர் இல. | விபரம் | அளவு | அலகு விலை (ரூபா) | தொகை (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | கைதுடைப்பான் | 50 | 60 | 3 000 |
| 02 | மேசை விரிப்புகள் | 20 | 200 | 4 000 |
| | | | | 7 000 |
| | கழி : 5% கழிவு | | | (350) |
| | | | | 6 650 |

(ஒப்பம்)
.............................
முகாமையாளர்

பட்டியல் **ஜோதி வியாபாரிகள்**
இல. **0014** **இல. 20, பிரதான வீதி,**
**யாழ்ப்பாணம்** 2012.11.20

முகாமையாளர்,
மங்களா புடவை வியாபாரிகள்,
திருகோணமலை

| தொடர் இல. | விபரம் | அளவு | அலகு விலை (ரூபா) | தொகை (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | வெள்ளைப் பப்ளின் | 100 m | 90 | 9 000 |
| 02 | வெள்ளை பொலிஸ்டர் | 150 m | 100 | 15 000 |
| | | | | 24 000 |
| | கழி : 10% கழிவு | | | (2 400) |
| | | | | 21 600 |

(ஒப்பம்)
.............................
முகாமையாளர்

**வரவுத் தாள்** **மங்களா புடவை வியாபாரிகள்**
**இல. 314** **இல. 10, பிரதான வீதி,**
**திருகோணமலை** 2012.11.10

முகாமையாளர்,
நித்யா பிடவை வியாபாரிகள்,
மட்டக்களப்பு.

2012.11.08 பட்டியல் இல 501 கொள்வனவுகள் தொடர்பிலான வெளித்திருப்பங்கள்

| **தொடர் இல** | **விபரம்** | **அளவு** | **அலகு விலை (ரூபா)** | **தொகை (ரூபா)** |
|---|---|---|---|---|
| 01 | கை துடைப்பான்<br>கழி :<br>5% கழிவு | 20 | 60 | 1 200<br><br>(60) |
| | | | | 1 140 |

வடிவ மாற்றம்

(ஒப்பம்)
..............................
முகாமையாளர்

**வரவுத் தாள்** **மங்களா புடவை வியாபாரிகள்**
**இல. 315** **இல. 10, பிரதான வீதி,**
**திருகோணமலை** 2012.11.23

முகாமையாளர்,
ஜோதி வியாபாரிகள்,
யாழ்ப்பாணம்.

2012.11.20 பட்டியல் இல 0014 கொள்வனவுகள் தொடர்பிலான வெளித்திருப்பங்கள்

| **தொடர் இல** | **விபரம்** | **அளவு** | **அலகு விலை (ரூபா)** | **தொகை (ரூபா)** |
|---|---|---|---|---|
| 01 | வெள்ளை பொலியெஸ்டர்<br>கழி :<br>10% கழிவு | 50 m | 100 | 5 000<br><br>(500) |
| | | | | 4 500 |

கட்டளையிலும் பார்க்க மேலதிகம்

(ஒப்பம்)
..............................
முகாமையாளர்

(i) மங்களா புடவை வியாபாரிகளின் மூல ஆவணங்களில் உள்ளடங்கியுள்ள மேற்கூறப்பட்ட தகவல்களைப் பதிவு செய்வதற்குப் பயன்படுத்த வேண்டிய முதன்மை ஏடுகளைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

(ii) மேற்கூறப்பட்ட மூல ஆவணங்களால் தரப்பட்டுள்ள கொடுக்கல்வாங்கல்களைப் பொருத்தமான முதன்மை ஏடுகளில் பதிவு செய்து காட்டுக. (5 புள்ளிகள்)

(iii) முதன்மை ஏடுகளில் பதிவு செய்த கொடுக்கல்வாங்கல்களைப் பேரேட்டுக் கணக்குகளில் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

**எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்**

5. (i) ★ கொள்வனவு நாளேடு (01 புள்ளி)

★ வெளிதிரும்பல் நாளேடு (01 புள்ளி)

(1 × 2 = 02 புள்ளிகள்)

(ii) கொள்வனவு நாளேடு

| திகதி | பட்டியல் இலக்கம் | வழங்குனரின் பெயர் | பே. ப | தொகை ரூ. | |
|---|---|---|---|---|---|
| 2012.11.08 | 501 | நித்தியா | | 6 650 | (01) |
| 2012.11.20 | 0014 | ஜோதி | | 21 600 | (01) |
| 2012.11.30 | | கொள்வனவுக் கணக்கின் வரவுக்கு மாற்றியது (½) | | 28 250 | |

வெளித்திரும்பல் நாளேடு

| திகதி | வழங்குனரின் பெயர் | பட்டியல் இலக்கம் | பே. ப | தொகை ரூ. | |
|---|---|---|---|---|---|
| 2012.11.10 | நித்தியா | 314 | | 1 140 | (01) |
| 2012.11.23 | ஜோதி | 315 | | 4 500 | (01) |
| 2012.11.30 | வெளித்திரும்பல் கணக்கிற்கு மாற்றியது (½) | | | 5 640 | |

(05 புள்ளிகள்)

(iii) கொள்வனவு

| 2012 | | ரூ. | 2012 | | ரூ. |
|---|---|---|---|---|---|
| 11/30 | கடன்கொடுத்தோர் (½) | 28 250 | 11/30 | மீ / செ | 28 250 |
| | | 28 250 | | | 28 250 |
| | | 28 250 | | | |

வெளித்திரும்பல்

| | | ரூ. | 2012 | | ரூ. |
|---|---|---|---|---|---|
| 11/30 | மீ / செ | 5 640 | 11/30 | கடன்கொடுத்தோர் (½) | 5 640 |
| | | 5 640 | | | 5 640 |
| | | | 12/01 | | 5 640 |

நித்தியா

| | | | ரூ. | | | | ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 11/10 | வெளித்திரும்பல் | (½) | 1 140 | 11/08 | கொள்வனவு | (½) | 6 650 |
| 11/30 | மீ / செ | | 5 510 | | | | |
| | | | 6 650 | | | | 6 650 |
| | | | | 12/01 | | | 5 510 |

ஜோதி

| | | | ரூ. | | | | ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 11/23 | வெளித்திரும்பல் | (½) | 4 500 | 11/20 | கொள்வனவு | (½) | 21 600 |
| 11/30 | மீ / செ | | 17 100 | | | | |
| | | | 21 600 | | | | 21 600 |
| | | | | | | | 17 100 |

* 4 கணக்குகளில் 6 பதிவுகளுக்கு ½ புள்ளி வீதம் மொததம் 03 புள்ளிகள் (½ × 3 = 06 புள்ளிகள்)
(மொத்தம் 10 புள்ளிகள்)

| 05. | (i) | (ii) | (ii) | |
|---|---|---|---|---|
| | 02 | 05 | 03 | $= \frac{10}{10}$ |

**5ஆம் வினாவிற்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும்**

வினாவிற்குப் புள்ளிகள் பெற்ற விதம்




5 ஆம் வினாவினை 52% ஆனவர்கள் தெரிவு செய்துள்ளனர். இவ்வினாவிற்கு வழங்கப்பட்ட மொத்தப் புள்ளிகள் 10 ஆகும்.

00 - 02 புள்ளி ஆயிடையில் 43%
03 - 05 புள்ளி ஆயிடையில் 17%
06 - 07 புள்ளி ஆயிடையில் 15%
08 - 10 புள்ளி ஆயிடையில் 25%
எனப் புள்ளிகள் பெற்றுள்ளனர்.

இவ்வினாவிற்கு 8 அல்லது அதற்கு மேல் புள்ளிகளைப் பெற்றவர்கள் 25% ஆக இருப்பதுடன் 45% ஆனவர்கள் 2 அல்லது அதற்குக் குறைந்த புள்ளிகளையே பெற்றுள்ளனர்.

வினாவின் பிரிவுகளுக்கும் உபபிரிவுகளுக்குமான இலகுதன்மை




இவ்வினாவில் 3 பகுதிகள் காணப்படுவதுடன் பகுதி i இன் இலகுதன்மை 75% ஆக இருப்பதுடன் பகுதி iii இன் இலகுதன்மை 40% ஆகும்.

> 5 ஆம் வினாவின் பகுதி (i) இற்கு பரீட்சார்த்திகளில் 75%மானோர் சரியான விடையளித்திருந்தனர். பயிற்சிகளினூடாக மூல ஆவணங்களையும் முதன்மை ஏடுகளையும் சரியாக இனம்கண்டிருந்தமையே இதற்கான காரணமாகும். கொடுக்கல் வாங்கல்களுக்குரிய மூல ஆவணங்களையும் முதன்மை ஏடுகளையும் மேலும் சரியாகக் கற்பதன் மூலம் இந்த தேர்ச்சியினை மேலும் அதிகரித்துக்கொள்ள முடியும். மூல ஆவணங்கள், முதன்மை ஏடுகள் தொடர்பிலான அறிவு இருந்தாலும் குறிப்பிடத்தக்க பிரிவினருக்கு அவற்றை நடைமுறை ரீதியில் பயன்படுத்துவது தொடர்பிலான விளக்கம் இல்லாமலிருப்பது பரீட்சார்த்திகளில் 58% மானோர் இதற்கு சரியாக விடையளித்திருப்பதிலிருந்து தெரியவருகின்றது. அத்துடன் தரம் 11 பாடப்புத்தகத்தில் "முதன்மை ஏடுகள்" தொடர்பிலான தேர்ச்சியினை உரியவாறு கற்பதன் மூலமும் முதன்மை ஏடுகள் தொடர்பான செயற்பாடுகளில் மாணவர்களை ஈடுபடுத்துவதன் மூலமும் இத்தேர்ச்சியினை மேலும் மேம்படுத்த முடியும்.
>
> பகுதி (iii) இற்கு பரீட்சார்த்திகளில் 40%மானோர் மாத்திரமே சரியாக விடையளித்திருந்தனர். முதன்மை ஏடுகளிலிருந்து பேரேட்டில் பதிவு செய்ய வேண்டிய பெறுமதி சரியாகக் கணிக்கப்படாமையும் கொடுக்கல் வாங்கலுக்குரிய இரட்டைப் பதிவு சரியாகக் இனம்காணப்படாமையுமே இதற்கான பிரதான காரணங்களாகும். தரம் 11 பாடப்புத்தகத்தினை சரியாகக் கற்பதன் மூலமும் உரிய செயற்பாடுகளில் மாணவர்களை ஈடுபடச் செய்வதன் மூலமும் இத்தேர்ச்சியினை மேம்படுத்திக்கொள்ள முடியும்.

**வினா இல. 6**

6. *உமா வணிகத்தின் 2012.03.31 இற்காகத் தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதி சமப்பட வில்லை. எனவே, பரீட்சை மீதியின் அவ்வித்தியாசத் தொகையானது தற்காலிகமாகத் தொங்கல் கணக்கிற்கு மாற்றப்பட்டது.*

**2012.03.31 ல் உள்ளவாறான பரீட்சை மீதி**

| | வரவு (ரூபா) | செலவு (ரூபா) |
|---|---|---|
| மூலதனம் | | 500 000 |
| 04.01.2011 இல் சரக்கிருப்பு | 60 000 | |
| கொள்வனவுகள் | 355 000 | |
| விற்பனைகள் | | 430 000 |
| சம்பளங்கள் | 45 000 | |
| தளபாடங்கள் | 70 000 | |
| காப்புறுதிக் கட்டணங்கள் | 5 000 | |
| காணிகட்டடங்கள் | 280 000 | |
| கடன்பட்டோர் | 50 000 | |
| கடன்கொடுத்தோர் | | 20 000 |
| காசு | 80 000 | |
| தொங்கல் கணக்கு | 5 000 | |
| | 950 000 | 950 000 |

*கணக்குப் புத்தகங்களைப் பரிசீலித்ததன் பின்னர் பின்வரும் தவறுகள் கண்டுபிடிக்கப்பட்டன.*

(i) ஆத்மிகாவிடமிருந்து கொள்வனவு செய்த ரூபா 2000 பெறுமதியான சரக்குகள் தொடர்பாக எவ்வித பதிவுகளும் காணப்படவில்லை.
(ii) செலுத்தப்பட்ட காப்புறுதிக் கட்டணங்கள் ரூபா 1200 காப்புறுதிக் கணக்கில் ரூபா 2100 எனப் பதிவு செய்யப்பட்டிருந்தது.
(iii) தளபாட திருத்தச் செலவுகள் ரூபா 5000 தளபாடக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது.
(iv) கடன் விற்பனைகள் ரூபா 5900 விற்பனைக் கணக்கில் சரியாகப் பதிவு செய்யப்பட்டிருந்த போதும் கடன்பட்டோர் கணக்கில் வரவு வைக்கப்படவில்லை.

**வேண்டப்படுவது :**

1. மேலுள்ள தவறுகளைத் திருத்துவதற்கான குறிப்பேட்டுப் பதிவுகள்
2. தொங்கல் கணக்கு
3. மேலுள்ள தவறுகளைத் திருத்திய பின்னருள்ள உமா வணிகத்தின் 2012.03.31 இல் உள்ளவாறான பரீட்சை மீதி

(மொத்தம் 10 புள்ளிகள்)

6. (1) **பொது நாட்குறிப்பேடு**

| திகதி | விபரம் | வரவு | செலவு | |
|---|---|---|---|---|
| 03/31 | கொள்வனவு<br>ஆத்மிகா<br>(புத்தகங்களில் தவறவிடப்பட்ட கடன் கொள்வனவு பதியப்பட்டது.) | 2 000 | 2 000 | (01) |
| | தொங்கல்<br>காப்புறுதி<br>(காப்புறுதிக் கணக்கில் கூடுதலாகக் காணப்பட்ட வழு திருத்தப்பட்டது.) | 900 | 900 | (01) |
| | தளபாடத் திருத்தம்<br>தளபாடம்<br>(தளபாடத் திருத்தம் தளபாடக் கணக்கில் பதிந்த வழு திருத்தப்பட்டது) | 5 000 | 5 000 | (01) |
| | கடன்பட்டோர்<br>தொங்கல்<br>(கடன்பட்டோர் கணக்கில் பதியப்படாத வழு திருத்தப்பட்டது) | 5 900 | 5 900 | (01) |

(நாட்குறிப்புப் பதிவொன்றுக்கு **01** புள்ளி வீதம் **04** புள்ளிகள்)

(2) தொங்கல் கணக்கு

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| மீ / வ | 5 000 (01) | கடன்பட்டோர் | 5 900 (01) |
| காப்புறுதி | 900 (01) | | |
| | 5 900 | | 5 900 |

(03 புள்ளிகள்)

(3) உமா வணிகத்தின் 31.03.2012 இன் பரீட்சை மீதி

| | ரூ. | ரூ. |
|---|---|---|
| மூலதனம் | | 500 000 |
| இருப்பு 2011.04.01 | 60 000 | |
| கொள்வனவு | 357 000 (½) | |
| விற்பனை | | 430 000 |
| சம்பளம் | 45 000 | |
| தளபாடம் | 65 000 (½) | |
| தளபாட திருத்தம் | 5 000 (½) | |
| காப்புறுதிக் கட்டணம் | 4 100 (½) | |
| காணி கட்டடம் | 280 000 | |
| கடன்பட்டோர் | 55 900 (½) | |
| கடன் கொடுத்தோர் | | 22 000 (½) |
| காசு | 80 000 | |
| | 952 000 | 952 000 |

(½ × 3 = 06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

| 06. | (1) | (2) | (3) | |
|---|---|---|---|---|
| | 04 | 03 | 03 | = $\frac{10}{10}$ |

**6ஆம் வினாவிற்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும்**




6 ஆம் வினாவினை 54% ஆனவர்கள் தெரிவு செய்துள்ளனர். இவ்வினாவிற்கு வழங்கப்பட்ட மொத்தப் புள்ளி 10 ஆகும்.

00 - 02 புள்ளி ஆயிடையில் 35%
03 - 05 புள்ளி ஆயிடையில் 17%
06 - 07 புள்ளி ஆயிடையில் 18%
08 - 10 புள்ளி ஆயிடையில் 30%
எனப் புள்ளி பெற்றுள்ளனர்.

இவ்வினாவிற்கு 8 புள்ளிகளுக்கு மேல் 30% த்தினர் பெற்றுள்ளதுடன் 35% த்தினர் 02 அல்லது அதனை விடக் குறைந்த புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




இவ்வினாவில் 3பகுதிகள் காணப்படுவதுடன் பகுதி 2 இன் இலகுதன்மை 65% ஆக இருப்பதுடன் பகுதி 3 இன் இலகுதன்மை 44% ஆகும்.

6வது வினாவில் பகுதி (1), பகுதி (2) இற்கு பரீட்சைக்குத் தோற்றியோரில் 65%மானோர் சரியாக விடையளித்திருந்தனர். கணக்கீட்டில் இடம்பெறுகின்ற வழுக்களைத் திருத்துவது, தொங்கல் கணக்கு தயாரிப்பது என்பவை தொடர்பாக மாணவர்களிடம் காணப்பட்ட சரியான அறிவும் விளக்கமுமே இதற்குக் காரணமாகும். எவ்வாறாயினும் தொடர்ந்து பயிற்சிகளில் ஈடுபடுத்துவதன் மூலம் இந்த அடைவு மட்டத்தை மேலும் அதிகரித்துக்கொள்ள முடியும்.

இவ்வினாவில் பகுதி (3) இற்கு பரீட்சை எழுதிய பரீட்சார்த்திகளில் 44% மானோர் மாத்திரமே சரியாக விடையளித்திருந்தனர். கணக்கீட்டில் இடம்பெறுகின்ற பிழைகளைச் சரியாக இனம்கண்டாலும் வழுக்களைத் திருத்திய பின்னர் சரியான பரீட்சை மீதியினைத் தயாரிப்பது தொடர்பான அறிவு மிகக் குறைவாக இருப்பதை இங்கு அவதானிக்க முடிகின்றது. அதனால் இவ்வாறான செயற்பாட்டு ரீதியிலான நிலைமைகளை பயிற்சிகளினூடாக மாணவர்களுக்கு விளக்குதல் மிக முக்கியமாகும்.

**வினா இல. 7**

7. ஹரிசன் வணிகத்தின் 2012.03.31 இல் உள்ளவாறான பரீட்சை மீதி பின்வருமாறு

| | வரவு (ரூபா) | செலவு (ரூபா.) |
|---|---|---|
| மூலதனம் | | 600 000 |
| 01.04.2011இல் சரக்கிருப்பு | 20 000 | |
| கொள்வனவுகள் | 100 000 | |
| விற்பனைகள் | | 120 000 |
| கடன்பட்டோர் | 30 000 | |
| கடன்கொடுத்தோர் | | 44 000 |
| வங்கிக்கடன் 12% | | 15 000 |
| காணி கட்டிடங்கள் (கிரயத்தில்) | 400 000 | |
| இயந்திரங்கள் (கிரயத்தில்) | 200 000 | |
| விற்பனைத் திருப்பங்கள் | 1 500 | |
| கொள்வனவுத் திருப்பங்கள் | | 3 000 |
| பெற்ற வாடகை | | 15 500 |
| இறைகள் | 4 000 | |
| காப்புறுதி | 5 000 | |
| ஊழியர் சம்பளங்கள் | 20 000 | |
| விளம்பரப்படுத்தல் | 2 000 | |
| கையிலுள்ள காசு | 15 000 | |
| | 797 500 | 797 500 |

**எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்**

7. (1)

ஹரிசன் வணிகத்தின்

31.03.2012 இல் முடிவுற்ற ஆண்டிற்கான வியாபார இலாபநட்டக் கணக்கு (½)

| | ரூ. | ரூ. | | ரூ. | ரூ. |
|---|---|---|---|---|---|
| ஆரம்ப இருப்பு | | 20 000 | | | |
| + கொள்வனவு | 100 000 | | விற்பனை | 150 000 | |
| - பற்று | 4 000 (½) | | உட்திரும்பல் | (1 500) (½) | 118 500 |
| | 96 000 | | | | |
| - வெளித்திரும்பல் | (3 000) (½) | | | | |
| | | 93 000 | | | |
| | | 113 000 | | | |
| இறுதியிருப்பு | | (25 000) (½) | | | |
| விற்பனைக் கிரயம் | | 88 000 (½) | | | |
| மொத்த இலாபம் | | 30 500 (½) | | | |
| | | 118 500 | | | 118 500 |
| **நிலைய நிர்வாகச் செலவு** | | | மொத்த இலாபம் | | 30 500 |
| இயந்திரப் பெறுமானத் தேய்வு | 20 000 (½) | | பெற்ற வாடகை | | 15 500 |
| இறைகள் | 4 000 | | | | |
| காப்புறுதி | 5 000 | | தேறிய நட்டம் | | (½) 6 800 |
| சம்பளம் | 20 000 | 49 000 (½) | | | |
| **விற்பனை விநியோகச் செலவு** | | | | | |
| விளம்பரம் | 2 000 | 2 000 (½) | | | |
| **நிதிச் செலவு** | | | | | |
| கடன் வட்டி | 1 800 | 1 800 (½) | | | |
| | | 52 800 | | | 52 800 |

(2)

ஹரிசன் வணிகத்தின்
2012 மார்ச் 31 இல் ஐந்தொகை } ½

| | | | சொத்துக்கள் | கிரயம் ரூ | தேய்மான ஏற்பாடு ரூ (½) | தேறிய புத்தகப் பெறுமானம் |
|---|---|---|---|---|---|---|
| மூலதனம் | 600 000 | | | | | |
| தேறிய நட்டம் | (6 800) ½ | | | | | |
| | 593 200 | | **நடைமுறையல்லாச் சொத்துக்கள்** | | | |
| - பற்றுக்கள் | (4 000) ½ | | | 400 000 | 20 000 | |
| | | 589 200 | காணி கட்டடம் | 200 000 | 20 000 | 400 000 |
| | | | இயந்திரம் | 600 000 | ½ | 180 000 |
| **நடைமுறையல்லாப் பொறுப்புக்கள்** | | | | | 25 000 | 580 000 |
| **பொறுப்புக்கள்** | | | | | 30 000 | |
| 12% வங்கிக் கடன் | | | | | 15 000 ½ | |
| | | ½ 15 000 | **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | | | | 70 000 |
| | | | இருப்பு | | | |
| கடன் கொடுத்தோர் | 44 000 | | கடன்பட்டோர் | | | |
| அட்டுறு வட்டி | 1 800 | | காசு | | | |
| | | ½ 45 800 | | | | |
| ½ | | 650 000 | | | | 650 000 |

(½ × 8 = 04 புள்ளிகள்)
(மொத்தம் 10 புள்ளிகள்)

| 07. | (1) | (2) | |
|---|---|---|---|
| | 06 | 04 | $= \frac{10}{10}$ |

**7ஆம் வினாவிற்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும்**

வினாவிற்குப் புள்ளிகள் பெற்ற விதம்




7 ஆம் வினாவினை 71% ஆனவர்கள் தெரிவு செய்துள்ளனர். இவ்வினாவிற்கு வழங்கப்பட்ட மொத்தப் புள்ளிகள் 10 ஆகும்.

00 - 02 புள்ளி ஆயிடையில் 23%
03 - 05 புள்ளி ஆயிடையில் 20%
06 - 07 புள்ளி ஆயிடையில் 25%
08 - 10 புள்ளி ஆயிடையில் 32%
எனப் புள்ளிகள் பெற்றுள்ளனர்.

இவ்வினாவிற்கு 8 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்கள் 32% என்பதுடன் 23% இனர் 02 அல்லது அதனை விடக் குறைந்த புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




இவ்வினாவில் 2 பகுதிகள் காணப்படுவதுடன் பகுதி 1 இன் இலகுதன்மை 63% ஆக இருப்பதுடன் பகுதி 2 இன் இலகுதன்மை 61% ஆகும்.

"நிதிக்கூற்றுகளைத் தயாரித்தல்" என்ற தேர்ச்சிமட்டத்தினூடாக இவ்வினா தயாரிக்கப்பட்டிருந்தது. இவ்வினாவினை பரீட்சார்த்திகளில் 71% மானோர் தெரிவு செய்திருந்தனர். கூடுதலான பரீட்சார்த்திகள் தெரிவு செய்த வினா இதுவாகும். பகுதி (I) இன் இலகுதன்மை 63% மாகவும் பகுதி (II) இன் இலகுதன்மை 61% மாகவும் காணப்பட்டது,

ஆசிரிய மாணவர்கள் இரு பிரிவினர்களுக்கும் இவ்வினா கட்டாயமாக தயாரிக்கப்படும் வினா என்ற நிலைமை காணப்படுவதனால் கற்றல்-கற்பித்தல் செயற்பாடுகளின் போது அதிகமாக மாணவர்கள் ஈடுபடுவதினூடாக கூடுதல் அடைவுமட்டத்தை அடைவதற்கு காரணமாயமைந்துள்ளது.

செயற்பாட்டு பெறுபேறுகளைக் கணிப்பதற்குத் தயாரிக்கப்படுகின்ற வியாபாரக் கணக்கினைத் தயாரிக்கும் போது மேலதிகத் தகவல்களாக வழங்கப்பட்டிருந்த பொருள் பற்றினைக் கவனத்தில் கொள்ளாமையினால் விற்பனைக் கிரயம், மொத்த இலாபம் என்பவற்றுக்கான புள்ளிகளைப் பரீட்சார்த்திகளால் பெறமுடியவில்லை.

செயற்பாட்டு பெறுபேற்றினைக் கணிக்கும் போது இலாபநட்டக் கணக்கிற்குரிய மேலதிக தகவலொன்றாக வழங்கப்பட்டிருந்த இயந்திரத் தேய்வு, பரீட்சை மீதியினூடாக இனம்கண்டுகொள்ளக் கூடிய வங்கிக் கடன் வட்டி என்பவற்றை உள்ளடக்காமையினால் சரியான தேறிய நட்டத்தினைக் கணிக்கும் சந்தர்ப்பம் இல்லாமல் போயிருந்தது. அத்துடன் தேறிய நட்டம் கிடைக்கக் கூடிய வகையில் செயற்பாடுகளில் மாணவர்கள் ஈடுபடச் செய்யாமை ஒரு குறைபாடாகும்.

வங்கிக் கடன் வட்டி தொடர்பில் கவனம் செலுத்தாமையினால் ஐந்தொகையில் நடைமுறைப் பொறுப்பின் கீழ் கிடைக்க வேண்டிய புள்ளி இழக்கப்பட்டிருந்தது. அத்துடன் வியாபார இலாபநட்டக் கணக்கு, ஐந்தொகை என்பவற்றிற்கு பெயரிடும்போது சரியான தலைப்புக்களை எழுதாமையும் புள்ளிகள் குறைவடைவதற்கு காரணமாகும். தரம் 11 பாடப்புத்தகத்திலுள்ள உதாரணக் கணக்குகளையும் செயற்பாடுகளையும் முறையாகத் தயாரிப்பதில் பரீட்சார்த்திகளை ஈடுபடுத்துதல், முறையாக மாதிரியொன்றில் நிதிக்கூற்றுகளைத் தயாரிக்க பழக்குதல் என்பவற்றினூடாக இத்தேர்ச்சி மட்டத்தினை விருத்தி செய்ய முடியும்.

2.2.3 **பகுதி II இற்கு விடையளித்தல் தொடர்பான முழுமையான அவதானிப்புக்களும், தீர்மானங்களும், முன்மொழிவுகளும்.**




வரைபிற்கு ஏற்ப கணக்கீட்டு வினாக்களை விடக் கூடுதலானோர் வணிகக் கல்வி வினாக்களுக்கே சரியான விடையளித்துள்ளனர். அதன் அதிகரிப்பு 3% ஆகும்.

| |
|---|
| பாடத்திட்டத்திற்குரிய சகல தேர்ச்சிகளையும் குறிப்பிட்ட காலப்பகுதியினுல் நிறைவு செய்வதன் மூலம் ஒவ்வொரு தேர்ச்சிகளுக்குமுரிய செயற்பாடுகள், ஒப்படைகளில் மாணவர்களை ஈடுபடச் செய்வதன் மூலமும் அவற்றை மதிப்பீட்டுக்கு உட்படுத்துவதன் மூலமும் அதன் பின்னர் பின்னூட்டல் வழங்குவதன் மூலமும் அடைவு மட்டத்தினை உயர் நிலைக்கு கொண்டு வரமுடியும். |

## பகுதி III

# 3. விடையளிக்கும் போது அவதானிக்க வேண்டிய விடயங்களும் ஆலோசனைகளும்

## 3.1 விடையளிக்கும் போது அவதானிக்க வேண்டிய விடயங்கள்

**பொதுவானவை**

- ★ வினாப்பத்திரத்தில் உள்ள அடிப்படை அறிவுறுத்தல்களை நன்றாக வாசித்து விளங்கிக் கொள்ள வேண்டும். அதாவது ஒவ்வொரு பகுதிகளிலிருந்தும் விடையளிக்க வேண்டிய வினாக்களின் எண்ணிக்கை, கட்டாய வினாக்களின் எண்ணிக்கை வினாப்பத்திரத்திற்கு விடையளிக்க வழங்கப்பட்டுள்ள நேரம் ஒவ்வொரு வினாவிற்கும் உரிய புள்ளிகளின் அளவு என்பவை தொடர்பில் கவனம் செலுத்துதல் வேண்டும். அத்துடன் வினாக்களை நன்றாக வாசித்து தெளிவான விளக்கம் ஒன்றைப் பெற்ற பின்னரே வினாக்களைத் தெரிவு செய்தல் வேண்டும்.
- ★ பரீட்சார்த்தியின் பரீட்சைக்குரிய சுட்டெண்ணை ஒவ்வொரு பக்கத்திலும் உரிய இடத்தில் எழுதுதல் வேண்டும்.
- ★ வினாப்பத்திரம் I இலுள்ள வினாக்களுக்கு விடையளிக்கும் போது மிகச் சரியான ஒரு விடையினைத் தெரிவு செய்தல் வேண்டும். அத்துடன் விடைத்தாளில் தெளிவாக ஒரு × அடையாளத்தினை மாத்திரமே இடுதல் வேண்டும்.
- ★ வினாப்பத்திரம் II இற்கு விடையளிக்கும் போது ஒவ்வொரு பிரதான வினாக்களுக்குமான விடையினை புதிய தாளில் ஆரம்பித்தல் வேண்டும்.
- ★ வினா இலக்கம், உப பகுதிகளின் இலக்கம் அல்லது எழுத்துக்களைச் சரியாக எழுதுதல் வேண்டும்.
- ★ சரியான தெளிவான கையெழுத்துக்களில் விடையெழுதுதல் வேண்டும்.
- ★ சுருக்க விடைகளை எழுதும் சந்தர்ப்பங்களில் மிக நீண்ட விளக்கங்களை உள்ளடக்காதிருப்பதுடன் விளக்கமான விடைகளை அளிக்க வேண்டிய சந்தர்ப்பங்களில் சுருக்க விடைகளை அளிக்காதிருக்கவும் வேண்டும்.
- ★ வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள முறைக்கேற்ப தர்க்க ரீதியாகவும் பகுப்பாய்வு ரீதியானதுமான விடயங்களை முன்வைத்தல் வேண்டும்.
- ★ பரீட்சை நேரத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளரின் அறிவுறுத்தல்களுக்கேற்ப ஒழுக்க விழுமியங்களைப் பேணி நடந்து கொள்ளல் வேண்டும்.

**விசேட அறிவுறுத்தல்கள்**

- ★ வினாக்களைத் தெரிவு செய்யும் போது கட்டாய வினாக்கள் தொடர்பில் கவனம் செலுத்துவதுடன் ஒவ்வொரு பாடப்பகுதிகளுக்கும் தெரிவு செய்ய வேண்டிய வினாக்களை உரியவாறு தெரிவு செய்தல் வேண்டும்.

- ★ வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வினாக்களின் எண்ணிக்கைக்கு மாத்திரம் விடையளிக்க வேண்டும் என்பதுடன் மேலதிக வினாக்களுக்கு விடையளிப்பதைத் தவிர்த்தல் வேண்டும்

- ★ விடையளிப்பதற்கு வழங்கப்பட்டுள்ள காலத்திற்கேற்ப ஒவ்வொரு வினாவிற்கும் விடையளிப்பதற்கு எடுக்க வேண்டிய நேரம், அதற்கு வழங்கப்படும் புள்ளிகள் என்பவை தொடர்பிலும் கவனம் செலுத்தல் வேண்டும்.

- ★ வினாவிற்குரிய விடையினை மாத்திரம் எழுத வேண்டும் என்பதுடன் தேவையற்ற தகவல்களை எழுதுவதிலிருந்து தவிர்ந்து கொள்ளல் வேண்டும்.

- ★ ஒரு வினாவிற்குரிய பகுதிகளினதும் உப பகுதிகளினதும் விடைகளை ஒன்றாக சேர்த்து இணைத்தல் வேண்டும்

- ★ விடையெழுதும்போது கறுப்பு அல்லது நீல நிறப் பேனைகளைப் பயன்படுத்துவதுடன் பென்சிலைப் பயன்படுத்துவதைத் தவிர்த்தல் வேண்டும்.

## 3.2 கற்றல் கற்பித்தல் தொடர்பான கருத்துகளும் ஆலோசனைகளும்

**விசேட அறிவுறுத்தல்**

- ★ ஆசிரியர் பாடத்திட்டத்திட்டத்திற்குரிய பாடம் தொடர்பில் அறிவினைப் பெற்றிருத்தல். அப்பாடம் தொடர்பிலான புதிய விடயங்களை அறிந்திருத்தல்.
- ★ மாணவர்களின் தேர்ச்சிகளைக் கட்டியெழுப்பக் கூடியவாறு கற்றல் கற்பித்தலுடன் இணைந்ததாக செயற்பாடுகளைத் திட்டமிடுதல்
- ★ தேர்ச்சியினை மையமாகக் கொண்ட பாடத்திட்டத்தினூாக சகல மாணவர்களும் குறைந்தபட்சம் அண்மிய சிறப்பு நிலையினை அடைய வைப்பதற்கு ஆசிரியர் முயற்சித்தல் வேண்டும்.
- ★ கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் அறிவினைப் பெற்றுக் கொடுப்பதில் மாத்திரம் தனது செயற்பாடுகளை மட்டுப்படுத்திக் கொள்ளாமல் மாணவர்களின் சிந்தனைகளில் கிளர்ச்சியினை ஏற்படுத்துவதற்கும் மாணவர்களின் தனிப்பட்ட சமூக தேர்ச்சிகளை மேம்படுத்துவதற்கும் கருமமாற்றுதல் வேண்டும்.
- ★ தெரிந்ததிலிருந்து தெரியாததற்கும் இலகுவிலிருந்து கடினத்திற்கும் ஒன்றிலிருந்து பலதுக்கும் மாணவர்களை கொண்டு செல்வதற்கு ஆசிரியர்கள் கருமமாற்றல் வேண்டும்.
- ★ மனதைக் கவரக்கூடிய முறையிலமைந்த ஆரம்பத்துடன் செயற்பாடுகளில் பிரவேசித்தல் தேவையான கற்பித்தல் உபகரணங்கள், ஏனைய வசதிகள் என்பவற்றுடனான கற்றல் சூழல் ஒன்றைத் திட்டமிட்ல்
- ★ வகுப்பறைக்கு வெளியே கற்றல் கற்பித்தலை விரிவாக்குவதற்கு பொருத்தமான உபகரணங்களைத் தயாரித்து வழங்கல்
- ★ குழுச் செயற்பாடுகளின் மூலம் சுய ஒழுக்கம் ஏனையோரின் கருத்துக்களைச் செவிமடுத்தல் பொறுமை, ஏனையவர்களுடன் ஒத்துழைப்புடன் செயற்படல், ஒருவருக்கொருவர் உதவி செய்துகொள்ளல் போன்ற பொது வாழ்க்கைக்குத் தேவையான முக்கியமான திறன்களை விருத்தி செய்துகொள்வதற்கு மாணவர்களுக்கு சந்தர்ப்பம் அளித்தல்
- ★ குறித்த கால வரையரைக்குள் பாடத்தேர்ச்சி மட்டங்களை முடித்தல், மேலதிகப் பயிற்சிகளில் ஈடுபடுத்தல் முன்னூட்டல் பின்னூட்டல்களை மாணவர்களுக்கு பெற்றுக்கொடுத்தல்
- ★ தேவையான சந்தர்ப்பங்களில் களச் சுற்றுலா, இணையப் பரிசீலனை (ஆய்வு) மேலதிக புத்தகங்களை வாசிக்கச் செய்தல் என்பவற்றினூடாக மாணவர்களின் பாட அறிவினை மேம்படச் செய்தல்